விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 31 ஞாயிற்றுக்கிழமை (17.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

## தடை செய்யப்பட்ட தமிழ் அமைப்புகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தாது

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தினருடன் பேச்சு நடத்த தயாரென அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாக சர்வதேசத்திற்கு தெரிவித்திருந்த நிலையில், தடை செய்யப்பட்ட நாடு கடந்த தமிழ் அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தப்போவதில்லை என தற்போது அரசாங் 23

## திருக்கேதீஸ்வரத்தில் வடக்கு ஆளுநர் வழிபாடு

### பாலாவியிலும் நீராடினார்



23

## பாராளுமன்றம் வருகிறார் ஞானசார தேரர்

(கொழும்பு)

எங்கள் மக்கள் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக கலகொட 23

### இரண்டு வாரங்களில்

## புதிய அரசியலமைப்பு அமைச்சரவைக்கு

(கொழும்பு)

இன்னும் இரண்டு வாரங்களில் உத்தேச புதிய அரசியலமைப்பு சட்ட வரைவு கலந்துரையாடலுக்காக அமைச்சரவையில் தாக்கல் செய் 23

### விவசாய, மீனவ பிரச்சினையை வலியுறுத்தி

## வடக்கு, கிழக்கில் இன்றும் நாளையும் பெரும் போராட்டம்

### சகலரையும் ஆதரவு தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விவசாயம், மீனவப் பிரச்சினையை முன்னிறுத்தி வடக்கு, கிழக்கில் இன்றும் நாளையும் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இப்போராட்டத்துக்கு சகல தரப்பினரும் ஆதரவு தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

## இரு போராட்டங்களுக்கும் அனைத்து தரப்பினரும் ஆதரவு தரவேண்டும்

### சுமந்திரன் எம்.பி கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

"வடக்கு, கிழக்கில் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இரண்டு கவனயீர்ப்புப் போராட்டங்களுக்கும் அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் 23

### சமையல் எரிவாயு விலை

## மீண்டுமொருமுறை அதிகரிக்கப்படலாம்

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் விலை அதிகரிப்பு என்ற செய்தியே தற்போது முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது.

இதன்படி அண்மையில் சமையல் எரிவாயு, பால்மா, கோதுமை மா 23

## நாட்டில் மேலும் 23 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 23 பேர் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளி 23

## பொருளாதார நெருக்கடி அடுத்த ஆண்டு இரட்டிப்பாகும்

### ஐ.தே.க தலைவர் ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய பொருளாதார முகாமைத்துவத்தில் அரசாங்கத்தின் இயலாமையின் வெளிப்பாடுகளை தற்போது நாட்டில் காணக்கூடியதாக உள்ளது.

இதன் தாக்கம் 2022ஆம் ஆண்டில் இரட்டிப்பாக காணப்படும் என எச்சரித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார சவால்களை 23

## ராஜபக்ஷ அரசு மக்களை வீதிக்கு கொண்டு வந்துவிட்டது

### விலை அதிகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் மனோ கணேசன்

(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டு மக்களை நடுவீதிக்கு கொண்டு வந்துவிட்டுள்ளது. இயலாமையுடன் செயற்படும் இந்த அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு மக்கள் தயாராகிவிட்டனர் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். 23

"EXPANSION OF HEALTH CARE SERVICES"
DISTRICT GENERAL HOSPITAL– KILINOCHCHI

Greater Hills Rotary Club

*Grand Opening Ceremony*

**ENHANCED DIALYSIS UNIT**

@

**DGH KILINOCHCHI**

On

**17.10.2021, Sunday, 3.00PM**

under

19 MILLION WORTH
ROTARY GLOBAL GRANT PROJECT (GG - 2123198)
"DIALYSIS FOR THE LITTLE BEANS OF YOUR BODY"

Rotary — SERVE TO CHANGE LIVES

(C-2834)

# வடக்கில் 27 பேருக்கு கொரோனா

வவுனியாவைச் சேர்ந்த 02 வயதுச் சிறுமி உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 27 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 319 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் 06 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 02 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)

## காணி விற்பனை

யாழ். கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில்
6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(உரும்பிராய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்)
காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை பார்வையிடலாம்.
1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(8288)

**077 468 3354 (குரு )**
**077 505 8561, 077 288 0152**

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள Hotel ஒன்றுக்கு
கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- சமையலாளர்கள்
- கிச்சின் கெல்பர் (உதவி சமையலாளர்)
- வெயிற்றர்
- துப்புரவு பணியாளர்கள்

(8287)

**077 231 5521**

## வேலையாள் தேவை

கிளிநொச்சியில் உள்ள
பான்சிக் கடை (Fancy)
ஒன்றிற்கு வேலையாட்கள்
தேவை.

(8286)

**☎-077 788 7271**

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச்
சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த
குடும்பப்பாங்கான ஆசிரியையாக
கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த
வரனை பெற்றோர்
எதிர்பார்க்கின்றனர்.


(8262)

**☎-070 640 5951**
e-mail : engchelvam@gmail.com

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை அன்ரன் நவரட்ணம்



**மலர்வு : 03.02.1955**
**உதிர்வு : 28.09.2021**

யாழ். வயாவிளான் வடமூலை புனித உத்தரியமாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா, லண்டன் Lewisham ஐ வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அன்ரன் நவரட்ணம் கடந்த 28.09.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (தம்பியப்பு) - மரியப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும் மன்னார் நானாட்டானைச் சேர்ந்த காலஞ்சென்ற FR ஜோண்பிள்ளை - சோதிநாயகி (நானாட்டான்) தம்பதியரின் அன்பு மருமகனும் றொகாணியின் (லண்டன்) ஆருயிர்க் கணவரும் அன்றூவின் அருமைத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நீக்கிலாஸ் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), ஞானரட்ணம், சிசிலியா மற்றும் மரியஞானேந்திரன் (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் புனிதசிசிலி (லண்டன்), ஜோசப் நவரட்ணம் (யாழ்ப்பாணம்), சன்ராலூட்ஸ் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சபாநாயகம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), இராஜேஸ்வரி மற்றும் மரியராணி (யாழ்ப்பாணம்), தேவரட்ணம் (யாழ்ப்பாணம்), விக்டர் (லண்டன்), மேரி யசிந்தா (யாழ்ப்பாணம்), எட்வின் (யாழ்ப்பாணம்), நிலானி (நோர்வே), ரமணி (ஜேர்மனி), லோரா (நானாட்டான்), பாபு (நானாட்டான்), டயானி (லண்டன்), பற்றீசியா (கனடா), சிரானி (கொழும்பு), ருக்மணி (ஐக்கிய அமெரிக்கா), ரெரன்ஸ் (நானாட்டான்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (18.10.2021) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். அவரின் நினைவாக யாழ். வயாவிளான் வடமூலை புனித உத்தரியமாதா கோவிலில் பிற்பகல் 4.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (8276)

வடமூலை,
வயாவிளான்.

தகவல்:- சா. சபாநாயகம்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15.10.1934



மறைவு 12.10.2021

அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா 73ஆவது (1992), 96ஆவது (2015) நிர்வாகக்குழுத் தலைவரும் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிரந்தர ஆலோசனைச் சபை உறுப்பினரும் சிறந்த சமூகசேவகருமான

### அமரர் தம்பிப்பிள்ளை பத்மநாதன்

அமைதியான உருவமே ஆளுமையின் சிகரமே
அரியாலையின் பொக்கிஷமே அன்பு நிறைந்தவரே
அரியாலை சுதேசிகனே ஆற்றல் மிகுந்தவரே
தலைவராக ஆலோசனைச் சபை உறுப்பினராக
தன்னலமில்லா சேவை புரிந்த சேவகரே
தரணியின் வாழ்வை விடுத்து சென்றீரோ?
துயரதில் தவிக்குது அரியாலை காண்பீரோ?
தூரநோக்கு கொண்டவரே
நிரந்தரமாக விழி மூடியதேனோ?
அரியாலையின் அபிவிருத்தியில்
பெரும் பங்காற்றியவரே
கல்விக்கு முதன்மை கொடுத்த பெருந்தகையே
வறியவருக்கு இலவசமாக கல்வி வழங்க வித்திட்டவரே
உங்கள் ஆத்மா சிவனடி சேர்ந்திட
இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம் எல்லோரும்

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருடன்... நிர்வாகத்தினர்
அரியாலை 102ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

(C-2836)

# திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரை

# பயங்கரவாத தடைச்சட்டத்தை இடைநிறுத்துங்கள்

## தேசிய சமாதான பேரவை வலியுறுத்து

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் இறுதி செய்யப்படும் வரை, அதன் பயன்பாட்டை இடைநிறுத்த வேண்டும் என கலாநிதி ஜெஹான் பெரேரா தலைமையிலான தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

தேசிய சமாதானப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அச்சட்டத்தின் கீழ் எவ்வித விசாரணை களுமின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொள்கை ரீதியில் முக்கிய மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றமை அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆற்றப்பட்ட உரைகளின் மூலம் வெளிப்பட்டுள்ளது என்றும் பேரவை தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வை வழங்குவதற்கு மக்கள் மனங்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது அவசியம் என்றும் தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை தமிழ் மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் கட்சிகளும் தத்தமது நிலைப்பாடுகளிலேயே தங்கியிருப்பதைவிடுத்து, பொதுவான பிரச்சினைகளில் ஒருமித்த நிலைப்பாட்டிற்கு வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. (4-5)

# புலிகளின் தலைவர் இருந்திருந்தால் தேசிய வளங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கும்

## எங்கள் மக்கள் சக்தி

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால், நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருக்க மாட்டாது என எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் டேன் பியசாத தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

"வடக்கில் பிரபாகரன் இருந்திருந்தால், கட்டாயம் திருகோணமலை துறைமுகங்களுக்குரியவை விற்பனை செய்யப்பட்டிருக்க மாட்டாது.

சீனா, இலங்கைக்கு வந்து துறைமுக நகரத்தை நிர்மாணித்திருக்காது.

இந்தியா துறைமுகங்களை கொள்வனவு செய்யவும் வந்திருக் காது என்று எமக்கு எண்ண தோன்றுகிறது.

சீனா, இலங்கைக்கு வந்திருப்பது இந்தியாவின் இரகசியங்களை தேட என இந்தியா கூறுகிறது.

எதிர்காலத்தில் இலங்கை மிகப் பெரிய போர் களமாக மாறும் இவ்வாறு சீனாவும், இந்தியாவும் மோதிக் கொண்டால், எமது நாட்டு மக்களே இழப்பீடுகளை செலுத்த நேரிடும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-5)

# இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விலையில் மாற்றமில்லை

## எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

இன்னும் இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விலை அதிகரிக்காது, அதேபோல் விலை அதிகரித்தாலும் அதிக விலையாக அது அமையாது, எனவே மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இலங்கைக்கு ஒரு வருடத்திற்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய ஓமான் அரசாங்கத்திடம் கடன் உதவிகளை கேட்டுள்ளதாகவும், அதேபோல் நிதி அமைச்சின் மூலமாக இதற்கான நிவாரணகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எரிபொருள் விலையை அதிகரிக்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு, ஆனால் நிதி அமைச்சர் இது குறித்து மௌனம் காக்கின்றார், இந்நிலையில் தான் ஓமானிடம் கடன் கேட்டுள்ளோம்,

ஒரு வருடத்திற்கான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு இந்த கடன் கேட்கப்பட்டுள்ளது, ஐந்து ஆண்டுகளுக்கு நிவாரணமும், அதன் பின்னர் 20 ஆண்டுகளில் கடன்களை செலுத்தி முடிப்பதை போன்று ஒரு பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது, இந்த பேச்சுவார்த்தை இன்னும் உறுதிப்படுத்தவில்லை, அந்த கடன் கிடைத்தால் எரிபொருள் விலை அதிகரிக்காது. (4-5)

# விலை அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து

# தமிழ் முற்போக்குக் கூட்டணி போராட்டம்




(கொழும்பு)


பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான திகாம்பரம், இராதாகிருஷ்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார் மற்றும் கட்சி செயற்பாட்டாளர்களும், மக்களும் பங்கேற்றிருந்தனர்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடன் குறைக்குமாறும், வரவு - செலவுத் திட்டம் ஊடாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறும் இதன்போது வலியுறுத்தப்பட்டதுடன், விவசாயிகளுக்கான உரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோஷம் எழுப்பட்டது.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை. தொழில் சுமையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமை மாற வேண்டும், நிர்வாகங்களின் அடாவடி முடிவுக்கு வர வேண்டும் எனவும் போராட்டத்தில்போது குரல் எழுப்பட்டது. (4-5)

# கட்சியிலிருந்து நீக்கப்பட்டார் அத்துரெலிய ரத்ன தேரர்



(கொழும்பு)

எங்கள் மக்கள் சக்தி அபே ஜனபல கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அத்துரெலிய ரத்ன தேரர் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவ, கட்சியால் எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்ததாக உறுதிப்படுத்தியுள்ளார்.

கட்சியின் மத்திய குழு அத்துரெலிய ரத்ன தேரரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் சுசந்த கொடிவக்கு கூறியுள்ளார்.கட்சியின் முடிவுகளுக்கு எதிராக செயற்படுவதாகவும் கட்சி மீது பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதாகவும் தெரிவித்து கட்சியின் ஒழுக்காற்று குழு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதேவேளை பாராளுமன்றத்தில் அத்துரெலிய ரத்ன தேரருக்கு பதிலாக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-5)

# உலகக் கிண்ணத்திற்கான இந்திய அணியின் ஜெர்சி வெளியீடு




இருபது-20 உலகக்கிண்ண போட்டிக்கான இந்திய அணியின் புதிய ஜெர்சியை பிசிசிஐ வெளியிட்டுள்ளது.

இருபது -20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் இன்று முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறு கிறது.

புதிய ஜெர்சியில் இருக்கும் வடிவங்கள் பில்லியன் கணக்கான ரசிகர்களின் ஆரவாரத்தால் ஈர்க்கப்பட்டவை என பிசிசிஐ குறிப்பிட்டுள்ளது.


இந்த ஜெர்சியை இந்திய கிரிக்கெட் அணியின் அதிகார பூர்வ கிட் ஸ்பான்சரான MPL Sports அறிமுகப்படுத்தியுள்ளது.

இது ஒரு அணி மட்டுமல்ல, அவர்கள் இந்தியாவின் பெருமை. இது வெறும் ஜெர்சி அல்ல, ஒரு பில்லியன் ரசிகர்களின் ஆசிர்வாதம். இந்திய அணியை உற்சாகப்படுத்த தயாராகுங்கள் என்று MPL Sports டுவிட் செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிகாரபூர்வ கிட் ஸ்பான்சரான MPL Sports-ன் தளத்தில் இந்த புதிய ஜெர்சி விற்பனைக்கு வந்துள்ளது. (4-5)

# கிண்ணம் வெல்வோம்

## பாபர் அசாம் நம்பிக்கை




இருபது-20 உலக கிண்ண தொடர் ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஓமனில் இன்று ஆம் திகதி தொடங்கி நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில், இந்தியா எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஆட்டமாக பாகிஸ்தானை எதிர் கொள்கிறது. ஒக்டோபர் 18 ஆம் திகதி பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்தை எதிர்த்து விளையாடுகிறது.

இந்நிலையில், இருபது-20 உலக கிண்ணத்தை நிச்சயம் வெல்வோம் என பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இருபது-20 உலக கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணிக்காக கப்டனாக பொறுப்பேற்றுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது.

அமீரகத்தில் கடந்த 3 ஆண்டுக்கும் மேலாக விளையாடி வருகிறோம்.

அங்கு நிலவும் சீதோஷ்ண நிலைமை எங்களுக்கு அத்துப்படி.

எனவே, நாங்கள் இருபது-20 உலக கிண்ணத்தை நிச்சயம் வெல்வோம் என குறிப்பிட்டுள்ளார். (4-6)

# பப்புவா நியூகினியாவை தோற்கடித்தது இலங்கை

உலக இருபது-20 கிரிக்கெட் தொடரின் பப்புவா நியூகினியா அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் இலங்கை 39 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஓமானில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய பெத்தும் நிஸ்ஸங்க 76 ஓட்டங்களையும், அவிஷ்க பெர்னாண்டோ 61 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூகினியா 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளுக்கு 123 ஓட்டங்களைப் பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் உலக இருபது-20 கிரிக்கெட் தகுதிச் சுற்றில் இலங்கை கிரிக்கெட் அணியினர் தன்னம்பிக்கையுடன் களமிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-6)

# மரண அறிவித்தல்

## கோபாலகிருஷ்ணன் தயாளரூபன்



யாழ். புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர், பிரான்ஸ் Noisy Le Grand ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கோபாலகிருஷ்ணன் தயாளரூபன் நேற்று முன்தினம் (15.10.2021) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - நாகம்மா தம்பதிகள் மற்றும் காலஞ்சென்றவர்களான சோமசேகரம்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கோபாலகிருஷ்ணன் - யோகாம்பிகை (கிளி) தம்பதியினரின் பாசமிகு மகனும் செல்வராசா - தவராணி (யாழ்ப்பாணம்) தம்பதியினரின் பாசமிகு மருமகனும் தாரகாவின் ஆசைக் கணவரும் கேதுஷா, அனன்யா, ஆதிஷ் ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் கேதாரரூபன் (ரூபன்-ஜேர்மனி), இன்பரூபன் (இன்பம் - யாழ்ப்பாணம்), ஞானரூபன் (ஞானம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அகல்யா, சிறீதேவி, பவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் மதன் (ஜேர்மனி), பானுமதி (சுவிஸ்), யசோதரா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மச்சானும் சுஜிதா, றஞ்சிதகுமார், காலஞ்சென்ற சொரூபன் (மேனன்) ஆகியோரின் அன்புச் சகலனும் காலஞ்சென்ற சீவரெத்தினம் - குணவதி (கனடா), கேதீஸ்வரன் - கண்ணகி (கிளிநொச்சி), சச்சிதானந்தன் - தர்சிகா (பிரான்ஸ்), இந்திராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம் - தையல்நாயகி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராசமணி, செல்வநாயகம் - காலஞ்சென்ற சற்குணதேவி, காலஞ்சென்றவர்களான குலசிங்கம் - சிவபூசணி, எதிர்வீரசிங்கம் - கஜலட்சுமிதேவி, மன்மதராசன் - புஸ்பறஞ்சனி, காலஞ்சென்ற நேசநாதன் - உலகேஸ்வரி, காலஞ்சென்ற அருணகிரிநாதன் - சுந்தராம்பாள் ஆகியோரின் பாசமிகு மருமகனும் பவிசன், பௌசினி, சசின், கனுஷ், கம்ஷா, சுருதியன், சரணவி (மேநிலா) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் அபிஷன், அஸ்விகா ஆகியோரின் பெரியப்பாவும் விஸ்வா, சாய்ரா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.10.2021 (வெள்ளிக்கிழமை) அன்று பிரான்ஸில் நடைபெறும். நேரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8285)

இல.29. கச்சேரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
077 912 9014
தகவல்: வே.செல்வராசா

# அரசின் தீர்மானத்திற்கு இணங்காவிட்டால் செயற்பாடுகள் இடை நிறுத்தப்படும்

## தொழிற்சங்கங்களை எச்சரிக்கிறார் திஸாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

**ஏதேனும் ஒரு தொழிற்சங்கம் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு இணங்காது செயற்பட்டால், அரசாங்கத்தின் பலத்தை பயன்படுத்தி அந்த தொழிற்சங்கத்தின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



கண்டியில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளின் தலைவர்களும் இதனையே கையாண்ட னர்.

ஏதேனும் தொழிற்சங்கம் ஒன்று தனது எல்லையை மீறி செல்லுமாயின், அதனை நிறுத்த அரசாங்கம் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இது அடக்குமுறையாக இருக்கலாம். அச்சுறுத்தலாக இருக்கலாம். எனினும் அரசாங்கத் தின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (4-5)

# பொருளாதாரப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு சாத்தியமற்றது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

**மக்கள் கடும் பொருளாதார கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்ற போதிலும் அந்த பிரச்சினைக்கு உடனடியான தீர்வுக்கு இருக்கும் எனத் தான் நம்பவில்லை என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் அவர் இதனை கூறியுள்ளார்.

"மக்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கின்றனர். மக்களின் பொருளாதார கஷ்டம், வறுமை என்பன வேகமாக அதி கரித்துள்ளது. இதன் மூலம் மக்களின் பிரச்சினைகள் மிகவும் உக்கிரமடைந்துள்ளன. இவற்றுக்கு தீர்வு ஒன்றை வழங்க வேண்டும். அவசர மான, உடனடியாக தீர்வு இருக்குமா என்பதை எம்மால் எண்ண முடியாது. இதனால், திட்டமிட்ட வேலைத் திட்டத் தின் ஊடாகவே இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது அவசியம்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# இந்தியாவிலிருந்து திரவ நைதரசன் உர இறக்குமதிக்கு தீர்மானம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து உயர்தர திரவ நைதரசன் உரத்தை அரசாங்கம் இறக்குமதி செய்யும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறுகிறார்.

இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் அம்பாறை மற்றும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள பிற மாவட்டங்களுக்கு மாதத்தின் இறுதிக்குள் விநியோகிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட விவசாய அபிவிருத்தி அலுவலகத்திற்கு ஏற்கனவே போதுமான அளவு உரம், இயற்கை உரம் மற்றும் பொட்டாசியம் குளோரைட் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.(4-5)

# 2024 இற்கு முன் 60,000 வீடுகள் நிர்மாணிக்கத் திட்டம்



(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்குள் 60.000 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் உள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் பிரதமர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூன்றாம் காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குறைந்த வருமானம் ஈட்டுவோருக்காக 40.000 வீடுகளும், நடுத்தர வகுப்பினர் மற்றும் பிற மட்டத்தினருக்கு 20.000 வீடுகளும் நிர்மாணிக்கப்பட உள்ளன. நகர திட்டத்திற்கமைய, ஒவ்வொரு நகரிலும் 100 வீடுகள் என்ற அடிப்படையில் 10.000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்நிலையில், கொழும்பில் மாத்திர மன்றி கிராமப் பகுதிகளிலும் இந்த வீடமைப்பு திட்டங்களை முன்னெடுக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (4-5)



# பண்டோரா ஆவணக் குற்றச்சாட்டை நிராகரித்தார் திருக்குமார் நடேசன்

(கொழும்பு)

பெரும் சர்ச்சைக்குரிய வகையில் சொத்துக்களை சேர்த்தமை சம்பந்தமாக பண்டோரா ஆவணங்கள் மூலம் தனக்கு வெளிநாடுகளில் சொத்துக்கள் இருப்பதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக திருக்குமார் நடேசன் தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணையின் போதே நடேசன் இந்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார்.

இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆணைக்குழுவிற்கு சென்ற நடேசன், அங்கு நான்கு மணி நேரம் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் விசாரணைகளுக்கு பதிலளித்துள்ளார்.

ஆணைக்குழுவின் அதிகாரிகளிடம் பதிலளித்துள்ள திருக்குமார் நடேசன்,

தனக்கு சொந்தமான உள்நாட்டில் உள்ள சொத்து விபரங்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் வெளியிட முடியும் எனவும் எனினும் பண்டோரா ஆவணங்களில் வெளியிடப்பட்டுள்ள சொத்துக் குவிப்பு தொடர்பான குற்றச்சாட்டுக்களில் பெரும்பாலானவை பொய்யான குற்றச்சாட்டுக்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவிற்கு தேவையெனில் சர்வதேச விசாரணை ஒன்றை நடத்துமாறும் அவர் ஆணைக் குழுவிடம் கூறியுள்ளார்.

பண்டோரா ஆவணங்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திருக்குமார் நடேசனின் மனைவியான முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு அழைத்து விசாரிக்கப்படவுள்ளதுடன் அதற்கான அழைப்பாணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்படும் என ஆணைக் குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-5)

# இணையவழி கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஐந்தாவது நிகழ்வு இன்று மாலை 7.00 மணிக்கு யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் "நிர்வாக ஆளுமையின் தனித்துவ அடையாளம் மரியசேவியர் அடிகள்" என்னும் தலைப்பில் சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ளவர்கள் சூம் செயலி இலக்கம் 789 3644809, கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந் நிகழ்வில் இணைந்து கொள்ள முடியும். (7-5)

(குப்பிழான்)

இலங்கையில் தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களில் ஒருவரான மஹாகவி உருத்திர மூர்த்தியின் 50 ஆவது நினைவு ஆண்டை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையானது நன்னிலைமையத்துடன் இணைந்து இன்று இரவு 7 மணி முதல் சிறப்பு இணையவழி நிகழ்வொன்றை நடத்துகிறது.

இந்த இணையவழி நிகழ்வில் Meeting ID: 6310629 9899, Passcode: Youth @2021 ஆகிய உள்நுழைவுத் தரவுகள் மூலம் இணைந்து கொள்ள முடியும் என யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறையின் தலைவர் தெரிவித்துள்ளார். (7-5-18)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது NVQ சான்றிதழுக்கான முழு நேர கற்கை நெறிகளை எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி மாவட்ட தொழில் பயிற்சி நிலையம், கைதடி தொழில் பயிற்சி நிலையம், காரைநகர் தொழில் பயிற்சி நிலையம், பண்டத்தரிப்பு தொழில் பயிற்சி நிலையம்,சுன்னாகம் தொழிற் பயிற்சி நிலையம்,மற்றும் வல்வெட்டித் துறை தொழில் பயிற்சிநிலையம் என்பவற்றில் ஆரம்பிப்படவுள்ளதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப்பு பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

மேலும் கற்க விரும்புவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னார் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது பிராந்திய தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் விண்ணப்பங்களை பெற 0212227949, 021 2211 793, 0212057047, 021 224 1851, 0212262550 மற்றும் 0707161955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் மேலும் தெரிவித்தார். (7-5)

# சிறுவர்களிடையே பரவும் உறுப்பு அழற்சி நோய்

❖ இரு சிறுவர்கள் பலி!

❖ அறுவர் தீவிர சிகிச்சைப் பிரிவில்

(கொழும்பு)

கொவிட் தொற்றின் பின்னர் சிறுவர்களுக்கு ஏற்படக் கூடிய பல உறுப்பு அழற்சி நோய் நிலைமை ஏற்படும் வீதம் கடந்த ஒரு வார காலமாக அதிகரித்து வருகிறது.

கொழும்பு - சீமாட்டி வைத்தியசாலையில் மாத்திரம் இந்நோயால் பாதிக்கப்பட்ட 6 சிறுவர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதோடு, இருவர் உயிரிழந்துள்ளதாக சீமாட்டி வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் நளின் கித்துல்வத்த தெரிவித்தார்.

மிஸ்சி நோய் தொடர்பில் மேலும் தெளிவுபடுத்துகையில், கொழும்பில் மாத்திரமின்றி நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளிலும் இந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 5 நாட்களில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்துள்ளனர். இதுவே இந்நோயின் அபாய நிலைமை ஆகும்.எனினும் உரிய நேரத்தில் உரிய சிகிச்சை கிடைக்கப்பெறா விட்டால் நோயாளர்கள் உயிரிழக்க நேரிடும்.

எனவே இந்நோயை ஆரம்ப கட்டத்திலேயே இனங் காணல் என்பது மிகவும் முக்கியத்துவமுடையதாகும்.

கொவிட் வைரஸ்"க்கு எதிராக எமது உடலில் உருவாகும் நோய் எதிர்ப்பு சக்தி, எமது உடற்பாகங்களுக்கு எதிராகவே செயற்படும் நிலைமை ஏற்படுகின்றமையே நோய் நிலைமை தீவிரமடையக் காரணமாகும். அதற்கமைய இதய தொகுதிக்கு எதிராக செயற்படும் போது, இதயத்திற் கான இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு உயிரிழப்பு ஏற்படக் கூடும். கடந்த 5 நாட்களில் இரு சிறார்கள் உயிரிழந்தமைக்கு இதுவே காரணமாகும். எனவே இந்நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (4-5)

# அனுமதி அட்டை பெறல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் 19.10.2021 அன்று சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்கான திகதியைப் பெற்றவர்கள் தங்களுடைய அனுமதி அட்டைகளை நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து, மீள் திகதியிடப்பட்ட அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகன திணைக்கள துணை ஆணையாளர் வை.பரந்தாமன் தெரிவித்துள்ளார். (7-5)

# ஏல விற்பனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் கந்தசாமி நவநீதன் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ் ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புவர்கள் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பதிவாளரின் அனுமதியுடன் மணலினை பார்வையிட முடியும் எனவும் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் நிரூபிக்கும் வகையிலான மூல ஆவணத்துடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருகை தர வேண்டும் எனவும் ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாக செலுத்தி ஏலப் பொருளினை தேவையற்ற காலதாமதமின்றி அப்புறப்படுத்த வேண்டும் எனவும் கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (7-5)




கணபதி அறக்கட்டளை நிறுவனத்தின் ஊடாக கனடாவில் வசிக்கும் தும்பளைப் பகுதியினை சேர்ந்த உறவுகளின் நிதிப்பங்களிப்பில் கடந்த புதன்கிழமை 15 குடும்பங்களுக்கு ரூ.3000 பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு இளங்கோ சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஏழாலை புங்கலடி சொர்ணாம்பிகா சமேத அம்பலவானர் சிவன் கோவிலின் பிரதம குருக்கள் சிவப் பிரம்ம ஸ்ரீ ச.து நந்த குமாராசிவச்சாரியார், பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிப்பரப்பு நிகழ்வாக இடம் பெறவுள்ளது. (7-5-18)



விஜயதசமி திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் நவாலி வழுக்கையாறு வெளியின் வீதி யோரமாக யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நிழல் தரு மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

அமெரிக்கா வாழ் தமிழ் உறவுகளின் நிதிப் பங்களிப்பின் இரண்டாம் கட்டமாக நன்கு வளர்ந்த 30 புங்கை மரங்கள் இதன் போது நாட்டப்பட்டன.

(படம்: ரவிசாந்)

# இராசிபலன்

17.10.2021
புரட்டாதி 31, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 7.30 மணிவரை
சதயம் பிற்பகல் 12.26 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சந்திராஷ்டமம்: பூசம், ஆயிலியம்

வளவன்


மேஷம்

எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், எதிர்பாராத முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களை தொடர்பு கொள்ளலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்தி ஒன்று வந்து சேரலாம் செய் தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கௌவரமான நாள்.


மிதுனம்

எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம்.


சிம்மம்

புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும், செய்தொழில், வளர்ச்சிக்கு புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், வருமானம் திருப்தி தரும், உடல் நலன் சீராகும்.


கன்னி

குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், நல்லவர்கள் தொடர்புகள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வியாபார திருப்தியுண்டு, பிள்ளைகளால் பெருமையுண்டு.


விருச்சிகம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.


தனுசு

பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொருளாதார நிலை உயரும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், போசன சுகமுண்டு.


மகரம்

காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம்.


கும்பம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், போசன நன்மையுண்டு.


மீனம்

உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம்.

ஒழுக்கமான வாழ்க்கையின் முதல்படி சோம்பலை வெற்றி கொள்வதே.

# உலக பட்டினி குறியீடு

# இலங்கைக்கு 65 ஆவது இடம்!

(கொழும்பு)

**2021 ஆம் ஆண்டுக்கான உலக அளவில் பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான பட்டியல் வெளியாகியுள்ள நிலையில், இலங்கைக்கு 65 ஆவது இடம் கிடைத்துள்ளது.**

அயர்லாந்தைச் சேர்ந்த கன்சர்ன் வேர்ல்ட்வைட் அமைப்பு மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்ப் அமைப்பும் சேர்ந்து பட்டினிக் குறியீடு பட்டியலை தயாரித்து வெளியிட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டுக்கான பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான அறிக்கைக்கு, 135 நாடுகளின் தரவு மதிப்பீடு செய்யப்பட்டது.

இவற்றில், 116 நாடுகளுக்கான 2021 பட்டினி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான மதிப்பெண்களைக் கணக்கிட மற்றும் தரவரிசைப்படுத்த போதுமான தரவு காணப்பட்டது. இதில் இலங்கைக்கு 65 ஆவது இடம் கிடைத்துள்ளது. (4-5)

## பொலிஸாரை தாக்கியவர் கைது

(கொழும்பு)

கொழும்பு முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலி ஹவுஸ் பூங்கா பகுதியில் பொலிஸ் அதிகாரிகள் இருவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கிய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் குறித்த பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த முகத்துவாரம் பொலிஸார் இருவர், குறித்த நபரை சோதனைக்கு உட்படுத்த முயற்சித்துள்ளனர். இதன் போது அவர், பொலிஸ் அதிகாரிகளை தாக்கியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த இரு பொலிஸாரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (4-5)

## போராட்டங்களால் பயனில்லை

### மகிந்தானந்த



(கொழும்பு)

எந்த உரத்தையும் தாருங்கள் எனக் கேட்ட விவசாயிகள் இப்போது இரசாயன உரங்களை மட்டுமே கேட்டு போராட்டம் செய்கின்றனர் என விவ சாய அமைச்சர் மகிந்தானந்த அழுத்க மகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


மேலும், இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய இப்போது அரசாங்கத்திற்கு நேரம் இல்லை.அந்த உரங்களை இறக்குமதி செய்ய குறைந்தது இரண்டு மாதங்கள் ஆகும்.

இரசாயன உரங்களுக்காக போராட்டம் நடத்துவதில் எந்த பயனும் இல்லை. இருக்கும் உரத்தைக் கொண்டு பயிர்செய்கை முன்னெடுங்கள்.

இத்தகைய உரப் பிரச்சனையை சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர். அசேதன உரங்களைப் பயன்படுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்கும். அதற்கு நான் பொறுப்பு எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (4-5)


## மரண அறிவித்தல்

மலர்வு 01 - 08 - 1962



உதிர்வு 15 - 10 - 2021

ஸ்தபதி சிற்பகலாபானு

## திரு.கந்ததாஸ் ரவீந்திரராசா

அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மோதரவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்ததாஸ் ரவீந்திரராசா அவர்கள் 15.10.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் சுப்பிரமணியம் கந்ததாஸ் - அமரர் கந்ததாஸ் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகனும், ரவீந்திரராசா - சுபாஜினி அவர்களின் அன்புக் கணவரும், சுவீஹரன், சுபர்ணிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் கந்தையா சுப்பிரமணியம், சுப்பிரமணியம் இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகனும், அமரர் ரஞ்சிதமலர், புனிதமலர், புஸ்பமலர்,வசந்தமலர்,ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷ்யந்தன், மனோரஞ்சன், துளசிதரன் மற்றும் ரஞ்சினி, சாந்தினி,ரவீந்திரன்,அமரர் மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.10.2021 ஞாயிற்றுக்கிழமை இன்று புஞ்சிப்பொரளை மலர்ச்சாலையில் இறுதிக்கிரியைகளுக்காக வைக்கப்பட்டு பொரளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-குடும்பத்தினர்
ரவீந்திரராசா சுபாஜினி,
076 675 7260,077 893 5246

(C-1500)

## ஜெயக்குமார் திருமண சேவை

1984 ஆண் சுவிஸ், 1989 கனடா, 1987, 1985 பிரான்ஸ், மற்றும் ஐரோப்பாவில் வசிக்கும் மணமகன்களுக்கு மணமகளகள் தேவை. 1990 இல் இருந்து 1995 வரையுள்ள (லண்டன் - கனடா) மணமகள்மாருக்கு பல்கலைக்கழகத்தில் படித்த மணமகன்மார் தேவை. ஊரிலுள்ள மணமகனுக்கும் மணமகள் தேவை

0764752219
Viber 0094762049298
0094764752219
German 004917643399372
Whatsapp

(8254)

# போதைப்பொருள் வியாபாரம் ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பை பல ப்படுத்தாமல் நாட்டை அபி விருத்தி செய்ய முடியாது. இதன் காரணமாகவே 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாது காப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது எனப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையா ற்றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடு கையில்,

பொது மக்கள் அச்சமில் லாமல் வாழ வேண்டும் என்பதற்காக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு ஸ்தா பிக்கப்பட்டது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு சட்ட ஒழுங்கினை பாதுகாத்து ஒழுக்கமான சமூ கத்தை தோற்றுவித்துள்ளது.

தேசிய பாதுகாப்பை பலப் படுத்தாமல் நாட்டை அபி விருத்தி செய்ய முடியாது. இதன் காரணமாகவே அர சாங்கம் ஆரம்பத்திலிருந்து தேசிய பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள் ளது. போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபா ரம் தற்போது ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளது.

கடல்மார்க்கமாக நாட்டு க்குள் உள்வரும் போதைப் பொருட்கள் பெருமளவில் கைப்பற்றப்படுவதனால் போதைப்பொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

போதைப்பொருள் பாவ னைக்கு அடிமையானவர் களை சிறையிலடைக்காமல் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



போதைப்பொருள் வியா பாரிகளுக்கு எதிராகக் கடு மையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (4-5)

## கொழும்பு துறைமுகத்தில் ரஷ்யக் கப்பல்கள்



(கொழும்பு)

ரஷ்யாவின் போர்க்கப்பல் ஒன்று டன், அந்த நாட்டுக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

கப்பல்சார் சேவைகளைப் பெற் றுக் கொள்வதற்காக, வெளிவிவகார அமை ச்சின் அனுமதியுடன் அந்தக் கப்பல்கள் கொழும்பு துறை முகத்திற்கு வந்துள்ளன.

அந்தக் கப்பல்கள் நாளை கொழு ம்பு துறைமுகத்திலிருந்து வெளி யேறும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (4-5)


## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

ஹற்றன் - வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா பிரதேசத் தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற உந்துருளி விபத்தில் இளை ஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த எந்தனி டொமினிக் என்ற 24 வய தான இளைஞரே இவ்வாறு பலியாகியுள்ளதாக வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டி ருந்த அதேவேளை, வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (4-5)


சிறார்களுக்கான சேமிப்பு வசந்தம்

HNB சிங்கிதி கணக்குடன் அதிகமாக சேமிப்பவர்களுக்கு மாபெரும் பரிசுக்குவியலுடன் நீங்கள் விரும்பியதை பெற்றிட ரூ.100,000 வரையிலான பரிசு வவுச்சர்கள்!

2021 ஒக்டோபர் 5 முதல் 2021 நவம்பர் 23 வரை




புலமைப்பரிசில்களையும் பெறுமதிமிக்க பரிசுகளையும் சிறார்களுக்கு அதிகளவிலான வரப்பிரசாதமாக வழங்கும் ஒரே ஒரு சிறுவர் சேமிப்பு கணக்கு HNB சிங்கிதி

* 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் சகல சிறார்களுக்கும் எதிர்காலத்தை வளமாக்க பணப்பரிசுகள் வழங்கப்படுகின்றன.
* HNB சிங்கிதி கணக்கிற்கு மாதாந்த நிலையியற் கட்டளையை வங்கிக்கு வழங்குங்கள். எதிர்பாராதவிதமாக உங்கள் அன்புக்குரியவரிடமிருந்து நிரந்தரமாக பிரிய நேர்ந்தால் நிலையியற் கட்டளைக்கேற்ற பணம் உங்கள் பிள்ளையின் சிங்கிதி கணக்கில் 18 வயது வரை வைப்பிலிடப்படும்.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே வழங்கப்படும்.
பரிசுகள் படங்களில் காட்டப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து வேறுபடலாம்.
16 வயதுக்குட்பட்டோருக்கு மாத்திரமே இப்பரிசுகள் செல்லுபடியாகும்.

011 2 462 462

HNB சிங்கிதி


sarasavi DSI Fashion Bug DSI BIKE LUMALA Abans DAMRO SINGER softlogic

(C-1499)

## மாற்றம் - ஏமாற்றம்

# புதியன கழிதலும் பழையன புகுதலும்

> “ஹாஸ் சிலிண்டரை மறந்து மக்கள் ஆரோக்கியமாக விறகடுப்பை தேர்வு செய்து விட்டனர். கண்டதையும் கலந்த பால்மாவை விடுத்து தூய பசும்பாலை பருகும் காலம் பிறந்துவிட்டது. இதுதான் மனித மாற்றம் என்பதோ!”



பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பது காலத்தின் தேவையானது. முன்னேற்றம் என்ற சொல் உள்ளவரை இந்தப் பழையன கழிதலும் புதியன புகுதலும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

பொங்கல் பண்டிகைக்கு முதல்நாள் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. பெரும்பாலும் இந்தியாவிலேயே இப்பண்டிகை கொண்டாடப்படுவது வழமை. போகிப் பொங்கல் என்றால், பொங்கல் தினத்திற்கு முதல் நாளன்று வீட்டில் உள்ள பழைய, பாவிக்க முடியாத பொருட்களை எல்லாம் வீட்டிற்கு வெளியே கொண்டுவந்து போட்டு அதற்கு நெருப்பு வைத்து எரித்து விடுவது.

பழையனவற்றை கழித்து புதியனவற்றைப் பெற்றுக் கொள்ளும் ஐதீகமே இப்போகிப் பொங்கல் ஆகும்.

அட, போகிப் பொங்கல் விடயத்தை ஏன் இவ்விடத்தில் பேசுகிறீர்கள் என நீங்கள் முணுமுணுப்பது புரிகிறது. தற்போதைய இலங்கைத் திருநாட்டு மக்களின் நிலையும் இதுவே.

போகிப்பொங்கலுக்கு பழையனவற்றை எரிப்பது போல பழைமையை மறந்து புதுமைக்குள் புகுந்து அதற்கு அடிமையாகியதால் இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

ஆம், பழைமையான விறகடுப்பு, தூசடுப்பு, சூட்டடுப்பு போன்ற ஆரோக்கியமான சமையல் முறைகளை மறந்து ஹாஸ் சிலிண்டர் வாங்கி நாகரிகமாக நடக்கின்றோம் என நரகத்துக்குள் வீழ்ந்து விட்டனர்.

அதன்விளைவு இன்று அரசின் விலையேற்ற வலையில் மக்களின் அத்தியாவசியப் பாவனையான ஹாஸ் சிலிண்டருக்கான விலையேற்றம் மக்களைப் பெரிதும் பாதித்திருக்கின்றது உண்மையாகிறது.

விலையேற்றம் என்றால் கொஞ்சநஞ்ச விலையேற்றம் அல்ல 1492 ரூபாயில் இருந்த ஹாஸ் சிலிண்டர் 2675 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது 1182 ரூபாய் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது எனின் அது நிச்சயமாக மக்கள் நலனில் அக்கறைகொண்ட எவரும் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்.

ஆனால் மக்களின் நலனைத் தூக்கி குப்பையில் போட்டுவிட்டு கண்ணை மூடிக்கொண்டு செயற்பட்டிருக்கிறது அரசு என்பது தான் வேதனை.

அண்மைக்காலமாக பால்மாவுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதைக் கண்ணூடே காணக்கூடியதாக உள்ளது.

ஐந்து யோக்கட் வாங்கினால் ஒரு அங்கர் வழங்கப்படும் என்ற தோரணையில் வர்த்தகர்கள் ஒன்றுக்காய் இன்னொன்றை விற்றுத் தீர்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதிலும் அங்கர் இல்லாது மக்கள் பட்டபாட்டைப் பார்க்கும் போது அடடா பாலினை மூலப் பொருளாகக் கொண்டு தயார் செய்யும் பால்மா இல்லை என்றால் இனி என்ன செய்வது என்று மக்கள் புலம்பிக் கொண்டிருப்பது மனக்கண்களில் பட்டுத்தெறித்தது.

கையில் நெய்யை வைத்துக் கொண்டு வெண்ணெய்க்கு அலைந்த கதையாய் எத்தனையோ பால் சங்கங்களைக் கடந்து பால்மாவுக்கு அலைகிறோமே என்பதை எண்ணும் போது யாரை நொந்து கொள்வது என்றே புரியவில்லை.

பால்மாவுக்கான தட்டுப்பாட்டைச் சரியாகப் பயன்படுத்திய வர்த்தகர்கள் தங்களுக்குத் தேவையானவர்களுக்கு மட்டும் பால் மாவைக் கொடுத்து மற்றவர்களுக்கு வஞ்சகம் செய்த செயலும் பல இடங்களில் அரங்கேறியதை அவதானிக்க முடிந்தது.

யாழ். நகரின் பிரபல அங்காடியில் ஒருவருக்குப் பால்மா வழங்கியதை அவதானித்த இன்னொருவர் பால்மா கேட்டபொழுது அவருக்குப் பால்மா இல்லை என மறுக்கப்பட்டதை எமது கண்ணூடே பார்க்க முடிந்தது.

இங்கு நாம் முதலில் எங்கே தவறு இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அண்மையில் முகப்புத்தகத்தில் ஒருவர் ஒரு பதிவை இட்டிருந்தார். மக்களின் அவசர தேவையை நிவர்த்தி செய்யாத இந்தப் பால்மாக்களை கொஞ்ச நாட்களுக்காவது மக்கள் தவிர்க்க வேண்டும். அப்போது தான் மக்கள்பட்ட துன்பம் குறிப்பிட்ட நிறுவனங்களுக்குப் புரியும் என அவர் பதிவிட்டிருந்தார். உண்மையில் அக்கருத்து ஏற்கத்தக்க யதார்த்தமான கருத்து.

மக்களின் நலனுக்காகத் தயாரிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை இப்படி தட்டுப்பாடு நிறைந் தாகக் காட்டி மக்களை மன உளைச்சலுக்கும் அலைச்சலுக்கும் ஆளாக்கிய இந்தத் தயாரிப்புக்களை மக்கள் ஏன் இனி வாங்க வேண்டும். இவ்வளவு நாட்கள் இவை இல்லாமல் இருக்க இயலும் என்றால், இனியும் இருக்கலாம்தானே என்ற முடிவுக்கு வரலாம்.

“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்பதைக் கொஞ்சம் மாற்றி “யாம் பட்ட துன்பத்தைப் பெறுக” அக்கம்பனிகளும் எனலாம்.

முகப்புத்தகத்தில் இடப்பட்ட பதிவொன்று மிகவும் ரசிக்க வைத்த பதிவாக இருந்தது.

ஒருவர் கேட்கிறார், அண்ண, விலைவாசி என்றால் என்ன என. அதற்கு மற்றவர் கூறுகிறார். விலை நமக்கு, வாசி அரசுக்கு என.

இது சிரிப்பதற்கானதாக இருந்தாலும் இதில் யதார்த்தம் நூறு விகிதம் உண்டு என்பது தான் கசப்பான உண்மை.

கொரோனாவின் கோரப் பிடிக்குள் சிக்குண்டு மக்கள் தொழில் இழந்து, வருமானம் இழந்து ஒருவேளை உணவுக்கே திண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், மக்கள் மீது அக்கறை கொள்ளாது பொருளாதாரச் சுமையினை நாட்டு மக்களின் முதுகில் தூக்கி சா்வசாதாரணமாக வைத்து விடுவது அவ்வளவு நல்லதல்ல. இதை மக்கள் ஒரு காலமும் ஏற்கார் என்பதே முழுமை.

ஆக, பழைமையினை மறந்து புதுமை என்ற மாயைக்குள் புகுந்து பழைமைக்குப் போகிப் பொங்கல் கொண்டாடிய மக்கள், மீண்டும் பழைமைக்குத் திரும்பும் நிலை வந்து விட்டது.

ஆம், மக்கள் ஹாஸ் சிலிண்டர்களைத் தூக்கி வீசிவிட்டு ஆரோக்கியமான விறகடுப்பில் சமைக்கப் பழகி விட்டார்கள். என்ன சேர்வை இருக்கிறது என்று தெரியாமல் பால்மாவுக்கு அடிமையாகித் திரிந்தவர்கள் தூய பசும்பாலைப் பாவிக்கப் பழக்கிக் கொண்டுவிட்டார்கள்.

இது செய்வோம், அது செய்வோம் என ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் என்னத்தைச் செய்தார்கள் என்றும் நன்கு புரிந்து விட்டார்கள்.

மக்களின் பழை மைக்குத் திரும்புதல் என்பது அரசியலுக்கும் பொருந்தும் என்ற நுண்ணிய செய்தியை மனதில் நினைத்து. சுபம்.

**அபிமன்யு**

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடிமாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

வடக்கு மாகாணத்திற்குப் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஆலடி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது எனக் கூறி அமர்ந்தார்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியை விதானையார் விசுவலிங்கம் கலைத்தார்.

விதானையார்: வடக்கில சட்டம் ஒழுங்கை நிலைநாட்டப் போவதாக புதிய ஆளுநர் கூறியிருக்கிறார்.


கங்காணி: அது நல்ல விசயம் தானே.

மூப்பர்: நல்ல விசயம் தான். ஆனால்...

சாத்திரியார்: என்ன மூப்பர் ஏதோ சொல்ல வந்திட்டு ஆனால்... எண்டு இழுக்கிறியள்.

மூப்பர்: வடபகுதியில சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுறது எண்டு ஆளுநர் சொல்வது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதை வடபகுதி பொலிஸ் தரப்புத்தானே செய்ய வேணும். எனினும் வடபகுதியின்ர பொலிஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பொலிஸ் அதிகாரிகள் எவரும் வடக்கில சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவோம் எனக் கூறவில்லை.

உண்மையில வடக்கின்ர பொலிஸ் தலைமை சொல்ல வேண்டியதை- செய்ய வேண்டியதை வடக்கின்ர புதிய ஆளுநர் கூறியிருக்கிறார். அது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதுதான் சந்தேகமாக இருக்குது.



**நில அபகரிப்புகளையும் ஆளுநர் தடுக்கவேணும்**

கங்காணி: ஏன் மூப்பர் ஒரு மாகாணத்தின்ர ஆளுநர் நினைத்தால், பொலிஸ் தரப்பை சரியான முறையில வழிப்படுத்திச் செல்ல முடியும் தானே.

மூப்பர்: கங்காணியார் நீங்கள் நினைக்கிற மாதிரியெல்லாம் நடக்காது. வடக்கின் பொலிஸ் தரப்பு ஒரு காலத்திலும் வடக்கின் ஆளுநருக்குக் கட்டுப்பட்டதான வரலாறு இல்லை. வடக்கின்ர பொலிஸ் தலைமையைப் பொறுத்தவரை அவர்கள் ஜனாதிபதியுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்கள்.

தவிர, வடக்கின் ஆளுநர் ஒரு சிங்களவராக இருந்தால், அவருடனான பொலிஸாரின் அணுகுமுறை ஒருவகையாக இருக்கும்.

அதேநேரம் வடக்கின் ஆளுநர் ஒரு தமிழராக இருந்தால், அவர் தொடர்பில பொலிஸாரின் அணுகுமுறை வேறுவிதமாக இருக்கும் என்பது தான் யதார்த்தமானது.

சிறாப்பர்: மூப்பர் சொல்லுறதில நிறைய உண்மைகள் இருக்கத்தான் செய்யுது. ஆனாலும் வடக்கின் புதிய ஆளுநர் சொல்லுற; சட்டம் ஒழுங்கு என்பது வாள்வெட்டுக்குழுக்கள் மற்றும் போதைவஸ்து தொடர்பானது எண்டு தான் நான் நினைக்கிறன்.

சாத்திரியார்: அப்ப, சங்கதி அப்படியோ. நான் நினைச்சன் சட்டம் ஒழுங்கு எண்டால், எல்லாத்தையும் தான் குறிக்கும் எண்டு.

கங்காணி: என்ன சாத்திரியார் சொல்லுறியள். நீங்கள் சொல்லுறது எனக்கொண்டும் விளங்கல்ல.

சாத்திரியார்: சட்டம் ஒழுங்கெண்டால், பொது மக்களின்ர காணிகளைப் படைத்தரப்பு சுவீகரிப்பதைத் தடுப்பது, சிவாலயங்கள் அமைந்த இடங்களை தொல்லியல் திணைக்களம் அபகரிக்கிற செயலை நிறுத்துவது, இலஞ்சம் போன்றவற்றை இல்லாமல் செய்வது என எல்லாம் அடங்கும் எண்டு நினைச்சன்.

வாத்தியார்: இஞ்சே சாத்திரியார் புதுக்க வந்தவரை சோலிக்குள்ள தள்ளிவிடாதீங்க.

பண்டிதர்: அதுசரி வாத்தியார், மாகாண சபைத் தேர்தல் நடக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கோ.

வாத்தியார்: மாகாண சபைத் தேர்தலை நடத்திற எண்ணம் அரசாங்கத்திட்ட இல்லை எண்டாலும் இந்தியாவைச் சமாளிக்கிறதுக்காக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் இருக்கத்தான் செய்யுது.

சிறாப்பர்: மாகாண சபைத் தேர்தல் நடந்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்ர முதலமைச்சர் வேட்பாளர் யாராக இருப்பினம்.

சாத்திரியார்: இதுகளுக்கெல்லாம் சாத்திரம் பார்த்துச் சொல்ல முடியாது.

என்னைப் பொறுத்தவரையில மாவை சேனாதிராசாவைத் தான் முதலமைச்சர் வேட்பாளராகக் கூட்டமைப்பு நிறுத்தும் எண்டு நினைக்கிறன்.

கங்காணி: கூட்டமைப்புக்குள்ள பெரிய குத் வெட்டுக்கள் நடக்குதல்லோ. சம்பந்தர் ஐயாவையும் முதுமை வாட்டுது. அவரும் எதுவும் செய்ய முடியாமல் சமாளிக்கிறார்.

தனக்குப் பிறகு இவர் தான் கூட்டமைப்பின்ர தலைமை எண்டு ஒருவரை சுட்டிக்காட்ட முடியாத அளவிலதான் அவரின்ர நிலைமை இருக்குது.

இந்த நேரத்தில கூட்டமைப்புக்குள்ள கன்னை பிரிந்து கங்கணம் கட்டுற வேலைதான் நடக்கும் போல.

விதானையார்: அது சரி தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்று சேர்க்கிறதெண்டு ஓர் அமைப்பு அவதாரம் எடுத்ததல்லோ. அதுக்கு என்ன நடந்ததாம்.

வாத்தியார்: சமயத் தலைவர்களை முதன்மைப்படுத்திக்கொ ண்டு, அலுவலை முடிக்கலாம் எண்டு ஒரு தரப்பு வெளிக்கிட்டது.

ஆனால் அங்க சமயத் தலைவர்களின்ர பெயர் வரிசையில சைவ சமயத்தை பின்தள்ளிப் போட்டினமாம். அது தென்கயிலை ஆதீன சுவாமிக்குப் பெரும் மனக் கஷ்டத்தை ஏற்படுத்திப் போட்டுது எண்டு கேள்வி.

சிறாப்பர்: உரிமையை வென்றெடுக்கின்ற முயற்சியிலேயே உரிமை மறுக்கப்படுவதாக இருந்தால், அவதாரங்கள் தமக்குரிய கடமையைச் செய்ய முடியாமல் போகும் என்பதுதான் உண்மை.

இவ்வாறு சிறாப்பர் கூற, அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



ஐ.பி எல்லில் சென்னை அணியின் வெற்றி எப்பேற்பட்டது வியாசரே?

**ராம் — வதிரி**

**எதற்கும் துணிந்தவன் நான் என பத்துப் பேருக்கு முன் உரத்துக் கூறுபவனைப்பற்றி?**

இரவில் அவசரத்திற்கு வெளியே போக வேண்டும் என்றால் மனைவியை எழுப்பி வீட்டில் உள்ள அத்தனை மின்குமிழ்களையும் போட்டுவிட்டு, தான் அங்கு போய் வரும் வரை அருகேயே நிற்க வேண்டும் என்று கண்டிசன் போடுபவர்களாக இருப்பார்கள்.

**ராகவா — வடமராட்சி**

**அரசியல் சாக்கடையை எவ்வாறு சுத்தம் செய்வது வியாசரே?**

சிம்பிள்.நான்கு வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் தேர்தல் என்ற சிரமதானத்தில் கலந்து கொள்ளுங்கள்.

நீங்கள் அங்கு போனதும் உங்கள் விரலைப் பிடித்து அதில் கறுப்பு மை தடவி அழுக்காக்குவர். அந்த அழுக்கை நீங்கள் அகற்றும் சாக்கடையாய் நினைத்துக் கொள்ளுங்கள். அகற்றுங்கள் சின்னங்களைப் புறந்தள்ளி, உண்மை, நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். எல்லாம் சரி வரும்.

**சுதன் — குப்பிழான்**

**இலங்கை அரசியலுக்கும் மனித உரிமைக்கும் தொடர்பில்லாமல் இருக்கிறதே வியாசரே?**

எப்படி இருக்கும்? காணாமல் போன எமது பிள்ளைகள் எங்கே என்று கேட்ட தாய்மாருக்கு " மண்ணுக்குள் தேடிப் பாருங்கள் " எனக் கூறியவர்களிடம் மனிதாபிமானம் இருக்குமா?

காணாமல் போன அனைவரும் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படும் என சர்வதேச அரங்கில் நின்று கூறுவது சர்வசாதாரணமான விடயமல்லவே.

தமிழினத்திற்காக குரல் கொடுக்கத்தான் எந்த நாதியும் இல்லை.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இலங்கையை விட்டு இளைஞர்கள் ஓடித்தப்புகிறார்களாமே உண்மையா மாமா?**

அப்படி ஒரு கதை அடிபடுகிறது உண்மை தான். அது எனது காதிலும் வீழ்ந்தது.

பொருட்களின் விலையை இப்படி ஏற்றிவிட்டால் திருமணமான–திருமணமாகப் போகும் இளைஞர்கள் இங்கு தாக்குப் பிடிப்பார்களா என்ன?

ஆளைவிட்டால் காணும் என்று பாஸ்போட்டை எடுத்துக் கொண்டு பறக்காமல் வேறு எதைச் செய்வார்கள். பாவங்கள்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**நிதர்சன் — வல்வெட்டித்துறை**

**பொருட்களின் விலைவாசி பற்றிக் கூறமுடியுமா வியாசரே?**

மனித இனம் வாழ முடியாத இடமாக இலங்கை மாறுகிறதோ எனும் எண்ணம் தோன்றுகின்றது.

ஒரு சாதாரண கூலித் தொழிலாளிக்கான சம்பளம் நாள் ஒன்றிற்கு 1000 ரூபா (ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு)

| | | |
|---|---|---|
| காலை உணவு | இரண்டு இறாத்தல் பாண் ,சம்பல் | 204/- |
| மதிய உணவு | அரிசி 1 கிலோ, மீன், பருப்பு, கீரை (இதர பொருட்கள்) | 600/- |
| இரவு உணவு | மாபிட்டு ஏதாவது கறி,சொதி, சம்பார் | 325/- |
| காலை/ மாலை தேநீர் | அங்கர்/ லக்ஸ்பிறே | 240/- |
| இதர தேவைகள் | உடுப்பு துவைக்கும் சவர்க்காரம்/ முகத்திற்கு போடும் சவர்க்காரம்/ சம்போ | 140/- |
| மொத்த ஒரு நாள் செலவு | | 1509/- |

மிகுதி 509 ரூபாவிற்கு யாரை வறுத்து வைத்துக் கட்டுவது?




பொருட்களின் விலைவாசி பற்றிக் கூறமுடியுமா வியாசரே?

**சிவன் — வடமராட்சி**

**ஐ.பி எல்லில் சென்னை அணியின் வெற்றி எப்பேற்பட்டது வியாசரே?**

சென்னை சுப்பர் சிங்ஸ் சம்பியன் அணி என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.

விளையாட்டைப் பொறுத்தவரை ஆரம்பம் என்பது மிக முக்கியமானது. ஆரம்பம் அமர்களமாய் இருந்தால் வெற்றியை எட்டுவது மிகச் சுலபமானது.

பலம் பொருந்திய கொல்கத்தாவை வீழ்த்த சென்னையின் ஆரம்பம் மிகச் சிறப்பாக இருந்தது. கிண்ணம் சென்னை வசமானது.மீண்டும் கூல் கப்ரின் உச்சத்துக்குச் சென்று விட்டார்.

**கர்னிஷ் — நுணாவில்**

**எங்கும் எதிலும் அவசரப்படும் ஜென்மங்களை என்ன சொல்ல வியாசரே?**

அண்மையில் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள வங்கி ஒன்றில் ஒருவர் காசோலையை மாற்ற வந்திருந்தார்.

வங்கி ஊழியர் கொஞ்சம் பொறுக்கும்படி கூற, ஏதோ தனக்குத்தான் பேசத் தெரியும் என்பது போலவும், தான் பெரிய பிஸ்னஸ்மான் என்றும் உடன் மாற்றித் தாருங்கள் இல்லையென்றால் எனது கணக்கை குளோஸ் பண்ணுங்கள் என்று பொரிந்து தள்ளினார்.

இதில் என்ன சிரிப்பென்றால் " எனது எக்கவுண்டை குளோஸ் பண்ணுங்கள் " என வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கூறியது தான். இப்படிப்பட்ட ஜென்மங்கள் திருந்தவே மாட்டார்கள். விட்டுவிடுங்களேன்.

**சங்கரன் — யாழ்ப்பாணம்**

**கொரோனா பயம்- விலைவாசி உயர்வுப் பயம் இந்த இரண்டிற்கும் ஈடுகொடுக்க முடியவில்லையே?**

என்ன செய்ய நாய் வேடம் போட்டால் குரைத்துத் தான் ஆக வேண்டும்,நரி வேடம் போட்டால் தந்திரம் செய்து தான் ஆக வேண்டும்.

அதே சிங்க வேடம் போட்டால் கர்ச்சித்துத்தானே ஆக வேண்டும்.மக்கள் நலனில் இம்மியும் அக்கறை செலுத்தாத அரசு, இருந்ததை விட இரண்டு மடங்கு விலை உயர்வை ஏற்படுத்தி விட்டு மக்களை ஒத்துழைக்கச் சொல்வது தான் வேடிக்கையின் உச்சம்.

**சுகு — யாழ்ப்பாணம்**

**உலகையே அழித்துக் கொண்டிருக்கும் கொரோனாவிற்கு மரணம் வராதா வியாசரே?**

கொரோனாவை இந்த உலகில் இருந்து அழிக்கலாம். ஆனால் அதற்கு முதலில் மக்கள் தயாராக வேண்டுமே.
அடிக்கடி கைகளைக் கழுவி ,சமூக இடைவெளியைப் பேணி, முகக்கவசத்தை கட்டாயம் அணிந்தால் கொரோனாவை அழிக்கலாம்.

ஆனால் நடப்பதோ முகக்கவசத்தை கீழே இழுத்து விட்டுவிட்டு மூக்கைச் சொறிவதாய் இருக்கிறதே.




# சிறுவர் அரங்கம்

## யாருக்கு வலிமை அதிகம்

மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நாட்டின் முதல் குடிமகன் என்கிற பெருமிதத்துடன் நகர் வலம் சென்றார்.

வெயிலின் உக்கிரம் அதிகமாக இருந்தது. பிரகாசமான வெளிச்சம் நேரடியாக மன்னரது கண்களில் பட்டது. கண்கள் கூசின. மன்னர் சங்கடமாக உணர்ந்தார்.

'நாட்டு மன்னனையே சுட்டெரிக்கும் பலத்தைச் சூரியன் பெற்றிருக்கிறது.

அப்படியெனில் சூரியன் மன்னரைக் காட்டிலும் வலிமை வாய்ந்தது' என்று நினைத்தார்.

வானில் ஒரு புதிய சூரியன் உதித்தது. உலகம் முழுவதையும் ஒளியால் மூழ்கடித்தது. பூமியை வந்தடைந்த அதன் கதிர்கள், பூமியைச் சூடாக்கின.

கடல் நீர், ஆவியாகி மேலெழுந்தது. மேகமாகக் குளிர்ந்து வானில் மிதந்தது.

மேகக் கூட்டம் சூரியனாக மாறியிருந்த சிற்பியின் முகத்தை மறைத்தது.

உடனே சூரியன், "நான், மேகமாக மாற வேண்டும்" என்று கடுமையான குரலில் சொன்னது. மேகமாக உருவெடுத்த சிற்பி, வானம் முழுவதுமாகப் பரவியது.



வானத்தில் திடிரென்று காற்று பலமாக வீசியது. மேகங்களைக் கலைத்துவிட்டது. மேகத்தைவிடக் காற்றுதான் வலிமையானது. "இப்போதே நான் காற்றாக மாற வேண்டும்" என்று கோபத்தில் சொன்னது மேகம்.

அப்போது உருவான சூறாவளிக் காற்றுப் பயங்கரசத்தத்துடன் வீசியது. நடை பயணிகளின் தலையிலிருந்த தொப்பிகளைத் தூக்கிச் சென்று வேறு இடத்தில் வீசியது. கட்டட மேற்கூரைகளைக் கிழித்தது.

வழியில் இருந்த ஓர் உயரமான பாறை, காற்றின் வேகத்தைத் தடுத்தது. பாறையில் மோதி, திக்கெட்டும் சிதறியது காற்று. இப்போது யார் வலிமையானவர்?

(தொடரும்)

# மகாபாரதம்

216



சோம்பேறிகளும், தைரியம் அற்றவர்களும், போலிக் கௌரவம் பார்ப்பவர்களும், பிறர் என்ன சொல்வார்களோ எனப் பயப்படுபவர்களும், விட்டு விட்டு முயல்பவர்களும் பொருள்களையடைய மாட்டார்கள்.

ஆமை போல தன் அவயவங்களை மறைத்துக் கொள்ள வேண்டும். கொக்கு போல ஒரே நினைப்பாய் இருக்க வேண்டும். சிங்கத்தைப் போல பயமின்றித் தன் வலிமையைக் காட்ட வேண்டும்.

போகப் பொருள்களை மிதமாக அனுபவிக்க வேண்டும். சமயத்திற்கேற்ப குருடன் போலவும், செவிடன் போலவும் நடிக்க வேண்டும்.

இடம், காலம் அறிந்து தன் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். பகைவரின் வலிமை அறிந்து செயற்பட வேண்டும்.

பயம் வரும் வரை பயந்தவன் போல இருக்க வேண்டும். பயம் வந்து விட்டாலோ பயம் இல்லாதவன் போல செயற்பட வேண்டும். கிடைத்த வாய்ப்பை நழுவ விடுவதும் இன்னொரு வாய்ப்பை எதிர்பார்ப்பதும் அறிவுடையார் செயல் அன்று.

பகைவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நிம்மதியாகத் தூங்குபவன் நிலை, மரத்தின் நுனியில் படுத்துத் தூங்கியவன் விழுந்த பின் விழித்துக் கொள்வதைப் போல ஆகும்.

தன் நாட்டிலும் அயல் நாட்டிலும் யாரும் அறியாதவாறு ஒற்றர்களை நியமிக்க வேண்டும். தண்ணீர்ச் சாலைகளில், தோட்டங்களில், விளையாடும் இடங்களில் அவர்கள் சென்று ஒற்றறிதல் வேண்டும்.

திருடர்களுக்குச் சரியான தண்டனை அளிக்க வேண்டும். நன்மை, தீமைகளை அறியாதவரையும், தீய வழியில் செல்பவரையும் மன்னன் தண்டிக்க வேண்டும். இதமாக பேசினாலும் பகைவரை நம்பக் கூடாது.

(தொடரும்)

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

வலி சொல்லும் தொடர்...

**சாப்பாட்டு மண்டபத்திலிருந்து எடுத்து வந்த கோழித்தொடை எலும்பை வலக்கையில் இறுக்கிப் பிடித்த படி, யாராவது ஒருவரைக் குத்திவிட வேண்டும் என்ற வெறியோடு நின்று கொண்டிருந்தான். மேல் சட்டை அணியாத அவனது வெண்ணிற தேகத்தில, கோப நரம்புகள் புடைத்து நெளிந்தன.**

கட்டுப்பாட்டு அறைக்கு சென்று, நான் சோதனை செய்யப் போவதையும், வேலியோரமாக நடக்கும் போது அது கமராவில் தெரிகிறதா என்பதையும் கண்காணிக்கும்படி சொல்லிவிட்டு, முட்கம்பி வேலிப் பக்கமாக நடக்கத் தொடங்கினேன்.

பகல் மழையில் மக்கிப்போன சருகுகள் சப்பாத்தின் அடியில் நசுங்கும் சத்தம் சீராகக் கேட்டுக் கொண்டிருந்தது. முகாம் வேலிக்கு வெளிப்புறமாக சுற்றிவர வெறும் காணிகள் தான். எல்லைக்கம்பங்களின் மின் வெளிச்சத்தில், வெட்டிய புல்லின் அடிக்கட்டைகள்கூட தெளிவாகத் தெரிந்தன.

வேலியின் ஒவ்வொரு துளைகளையும் உற்றுப் பார்த்தபடி நடந்தேன். கிழக்கு பக்க எல்லைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த யூக்கலிப்டஸ் மரத்திலிருந்து பனி சொட்டிக்கொண்டிருந்தது.


அப்போது முகாமில் திரண்டிருந்த இரவின் அமைதியை கிழித்துக்கொண்டு "பளீர்" என்றொரு சத்தம். கண்ணாடி ஜன்னலொன்று ஒரே அடியில் நொறுங்கி விழுகின்றது.

'ஆல்பா' காம்பவுண்டின் வேலிக்கு அருகில் நின்றுகொண்டிருந்த நான், என்னை அறியாமலேயே, சத்தம் கேட்ட வேகத்தில் திரும்பிய போது, ஒன்பதாம் இலக்க அறையின் உடைந்த ஜன்னல் வழியாக ஓர் உருவம் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது.

'ஆல்பா' காம்பவுண்டிலிருந்து "ரெஸ்பான்ஸ் ரெஸ்பான்ஸ்... கோர்ட் பிளாக்..." என்ற சத்தம் இருளின் அமைதியைக் கிழித்தது. உதவி கோரும் அதிகாரியின் பதற்றமான குரல், சகல உத்தியோகத்தர்களது தொலைத்தொடர்பு கருவியிலும் அலறியது.

கட்டுப்பாட்டு அறை அதிகாரியும் அந்த அபாய அறிவிப்பைத் தனது தொலைத் தொடர்பு கருவியின் ஊடாக உறுதிப்படுத்தி அறிவிக்கிறார்.

காத்திருந்த இரவு துள்ளியெழுந்து கொண்டது. வேறு பணியில் நின்றுகொண்டிருந்த அதிகாரிகள் எல்லோரும் 'ஆல்பா' காம்பவுண்டின் ஒன்பதாவது அறைக்கு ஓடினார்கள்.



ஜூனியர் விகடன்

நான் அங்கு சென்றபோது அப்பாஸை முதன்முதலாகக் கண்டேன். எந்த அதிகாரியும் அருகில் அடியெடுத்து வைக்க முடியாத ஆத்திரத்தோடு அவன் நின்று கொண்டிருந்தான்.

சாப்பாட்டு மண்டபத்திலிருந்து எடுத்து வந்த கோழித்தொடை எலும்பை வலக்கையில் இறுக்கிப் பிடித்த படி, யாராவது ஒருவரைக் குத்திவிட வேண்டும் என்ற வெறியோடு நின்று கொண்டிருந்தான். மேல் சட்டை அணியாத அவனது வெண்ணிற தேகத்தில, கோப நரம்புகள் புடைத்து நெளிந்தன. அவனது கணுக்கைகள் கோபத்தில் நடுங்கியபடியிருந்தன.

அவன் பிளிறிய சத்தம் பூட்டியிருந்த அறையில் அதிகமாக அதிர்ந்தது. உள்ளே குவிந்திருந்த அதிகாரிகள் அத்தனை பேரது கண்களையும் தன் பார்வையால் குதறினான். ஏதோவொன்றை செய்வதற்கு முடிவெடுத்துவிட்டவனைப்போல, ஒரு வேட்டை நாயாக உறுமினான்.

சற்றும் எதிர்பாராத வேகத்தில், அவனுக்குப் பின்னிருந்த கண்ணாடிக் கதவின் வழியாக உள்ளே நுழைந்த அதிகாரி ஒருவர், அவனது கால்களுக்குள் தனது காலை நுழைத்து, அப்பாஸைக் கீழே விழுத்தினார்.

இருட்டில் பின்னாலிருந்து வந்த அதிகாரியின் பிடியை சற்றும் எதிர்பாராத அப்பாஸ், அறையின் நடுவிலிருந்து மேசையில் குப்புற விழுந்தான். பின் தரையில் சரிந்தான். கோழி எலும்பு வைத்திருந்த அவனது கைகளை தரையோடு ஒருவர் அழுத்த, காத்திருந்த ஏனையவர்கள் அவனைப் பந்தாகத் தூக்கிக் கொண்டார்கள்.

அத்தனை அதிகாரிகளையும் உதறிக்கொண்டு எழுவதற்கு அப்பாஸ் எழுப்பிய சத்தம் முகாமின் வேலிகளையே உலுப்பியது. அவனது கைகளிலிருந்த கோழி எலும்பு அவனது நாடியில் குத்தியது. முழங்கையிலும் இரத்தம் கசிந்தது.

முதலுதவிப் பெட்டியோடு விரைந்து வந்த பெண் அதிகாரி, காயத்துக்கு பிளாஸ்டர் போடுவதற்காக அவன் முன்னால் பதற்றத்தோடு குந்தினாள். அவளது முகத்தைச் சரியாக இலக்கு பார்த்த அப்பாஸ், அடி நாவிலிருந்து திரட்டிய எச்சிலை அவள்மீது காறித் துப்பினான். அது அப்படியே அவளது இடது கண்ணில் விழுந்து கன்னத்தோடு வழிந்தது.

அடுத்த நாள் மதியம், முகாமுக்குப் பொறுப்பான குடிவரவு அமைச்சின் அலுவலகத்தில் சந்திப்பு ஆரம்பமானது. குடிவரவு அமைச்சின் பொறுப்பதிகாரிகள் இருவரும், முகாமின் வைத்தியப் பணிப்பாளரும் பாதுகாப்புக்குப் பொறுப்பான நிறுவனத்தின் சார்பில் நானும் கலந்து கொண்டிருந்தோம்.

சந்திப்பு ஆரம்பமாவதற்குக் கடைசி நொடியில் அறைக்குள் மூன்றாவது குடிவரவு அமைச்சின் அதிகாரியும் வந்தார். எஞ்சியிருந்த ஐந்தாவது கதிரையை இழுத்துப்போட்டு அமர்ந்தார். தனது கோப்புக்களோடு, பொலித்தீன் பையில் பாதுகாப்பாக எடுத்து வந்த கோழி எலும்புத் துண்டையும் மேசையின் நடுவில் வைத்தார். இப்போது எல்லோரும் என்னைப் பார்த்தார்கள்.

குடிவரவு அமைச்சு அம்மணி, கேள்வி கேட்ட வேகத்தில், அவரது சுருங்கியிருந்த கன்னங்களின் மீது குந்தியிருந்த கண்ணாடி ஒரு தடவை துள்ளி அமர்ந்தது. "அதிகாரிகளைத் தாக்குவதற்காக கைகளில் கோழி எலும்போடு ..."

"எங்களுக்கு எந்த விளக்கமும் வேண்டாம். அதற்குத்தானே உங்களது நிறுவனத்தின் இத்தனை அதிகாரிகளுக்கு அரசாங்கம் ஊதியம் தருகிறது. நீங்கள் கேட்கும் வசதிகளையெல்லாம் செய்து தருகிறோம். இத்தனை அதிகாரிகளிருந்தும், ஒரு சிறுவனை அமைதிப்படுத்த முடியாமல், குப்புற விழுத்தி, முகத்தை உடைத்திருக்கிறீர்கள்."

"முகத்தில் காயம் வந்ததற்குக் காரணம், அவன் வைத்திருந்த கோழி எலும்பு"


"நான் திரும்பவும் சொல்கிறேன் மிஸ்டர், உங்களால் அமைதிப்படுத்த முடியாத ஒரு சிறுவனுக்கு, உங்களால்தான் காயமேற்பட்டிருக்கிறது. அது கோழி எலும்பென்றால் என்ன... கங்காரு எலும்பென்றால்தான் என்ன?"

இவருக்கு எங்களது அதிகாரிகளின் மீது பிரச்சினையா... கோழி மீது பிரச்சினையா? இப்போது, அடுத்த அதிகாரி ஆரம்பித்தார்.

(அடுத்த வாரம் தொடரும்)

# கடல் புறா

## கை சொன்ன கதை




இதை எதற்காகச் சொல்லுகிறான் அநபாயன் என்று மற்றவர்களுக்கு புரியாவிட்டாலும் அமீருக்கு மட்டும் மிகத் தெளிவாகப் புரிந்தது. "ஆகாயத்தைப் பார்த்திருங்கள் அடையாளத்துக்கு" என்று அநபாயன் குதிரைச் சாலைத் தலைவனுக்குக் கூறியதன் நோக்கம் அப்பொழுதுதான் புரியவே, அமீர் பயமும் பக்தியும் ஆச்சரியமும் கலந்த பார்வையொன்றை அநபாயன் மீது செலுத்தினான்.

ஆகாயத்தில் எரியம்பு போனதும் அரபு நாட்டான் முரட்டுப் புரவிகள் இருப்பதையும் அவிழ்த்துக் குறுக்கே விரட்டி விடுவான். தாறுமாறாகப் பாய்ந்து செல்லும். அந்தப் புரவிகளைத் தாண்டி வண்டியை மடக்க ஆயிரம் கலிங்கத்து வீரர்களாலும் முடியாது. ஆகாகா! எப்பேர்ப்பட்ட திட்டம்! எத்தனை கூரிய அறிவு இவருக்கு! படிப்படியாக ஒவ்வொரு தடையையும் சமாளிக்க ஏற்பாடு செய்திருக்கிறாரே' என்று நினைத்து நினைத்து வியப்பில் ஆழ்ந்த அமீரின் உள்ளத்தில் கவலையும் புகுந்து கொண்டது.

அரபுப் புரவிகளின் வேகம், தாறுமாறான பாய்ச்சல், பழக்கப்படாததால் கடிக்கும் சுபாவம், இத்தனையும் மீறிக் கலிங்க வீரர் வரமுடியாது. ஆனால் அதேபோல் அந்தப் புரவிகள் நம் வண்டி மீதும் பாய்ந்தால்!" என்று எண்ணினான். அடுத்த வினாடி விளைவைப் பற்றி எண்ணவும் பயந்தான். "விளைவு விபரீதமாகும்.

நீர்க்குடங்கள் உடையும். மாடுகள் மிரளும். வண்டியே புரவிகளால் கவிழ்க்கப்பட்டாலும் படலாம். அப்படி கவிழ்க்கப்பட்டால் யார் வண்டிச்சக்கரத்தில் அகப்படுவார்கள்? யார் புரவிகளின் கால்களில் சிக்குவார்கள்? சொல்ல முடியாத பயங்கரம்" என்று நினைத்த அமீர் திகிலின் சொரூபமாக விளங்கினான்.

அவன் திகிலின் காரணத்தைப் புரிந்துகொண்ட அநபாயன், "நீ நினைக்கும் கஷ்டமும் இருக்கிறது அமீர். ஆனால் வண்டியை வேகமாகச் செலுத்த உனக்கிருக்கும் சாமர்த்தியத்தில் நான் அந்த ஆபத்திலிருந்து மீள நம்பிக்கை வைத்திருக்கிறேன்" என்றான்.

அமீரும் அநபாயனும் பரிமாறிக் கொண்ட சொற்களையும் எண்ணங்களையும் புரிந்துகொள்ள முடியாததால் அந்தத் திட்டத்தைப் பற்றிய விபரங்களையும் மற்றவர்களுக்குத் தெரிவித்தான் அநபாயன். ஆகாயத்தில் எரியம்பு பறந்ததும் மூர்க்கத்தனமுள்ள இருபது அரபுப் புரவிகள் தாறுமாறாக ஓடிக் கிழக்கு வாசல் வீரர்களைத் தேக்கும். அவற்றைத் தாண்டுவது பெரும் படைக்கும் சுலபத்தில் முடியாது அந்தக் குழப்பத்தில் கிடைக்கும் இடைக்காலத்தை நாம் நீர்க்கரையை அடையப் பயன்படுத்திக் கொள்வோம்.

நீர்க்கரையில் சீனத் தலைவரின் படகுகள் தயாராயிருக்கும். வண்டி நின்றதும் குடங்களில் உள்ளவர்கள் தரையில் குதித்துப் படகுகளுக்கு ஓட வேண்டும். தொடரும் வீரர்களை நானும் அமீரும் தடுத்து நிற்போம். தேவியும் குணவர்மரும் மற்றோரும் படகுகளில் ஏறியதும் நாங்களும் ஓடி ஏறிக்கொள்வோம். பிறகு படகுகள் புகார் செல்லும் மரக்கலத்தை நோக்கி விரையும்.

படகு அணுகியதும் அந்த மரக்கலம் பாய் விரித்தோடத் தயாராயிருக்கும். இதுதான் திட்டம். இடையே பல இடுக்கண்கள் நேரலாம். அவ்வப்பொழுது அவற்றை நமது யுத்தி கொண்டு முடிந்த வரை சமாளிக்க வேண்டும். மனித யுத்தி இவ்வளவுதான் மற்றப்படி நாம் தப்புவதும் அல்லாததும் ஆண்டவனின் கரங்களில் இருக்கின்றன என்று சொல்லித் தலையைக் குனிந்து கொண்ட அநபாயன் சில விநாடிகள் ஆண்டவனை நினைத்தான்.

அறையிலே மௌனம் நிரம்பி நின்றது. "இனி நாம் கலையலாம். இன்றிரவு ஐந்தாவது நாழிகை புறப்படச் சித்தமாயிருங்கள்" என்று உத்தரவிட்ட அநபாயன் அனைவருக்கும் சிரம் தாழ்த்தினான். அன்று முழுவதும் குணவர்மன் ஒரு நிலையில் இல்லை 'எதற்காகச் சோழ நாடு வந்தோம்? சாவதாயிருந்தால் கடாரத்திலேயே செத்திருக்கலாமே! என்று அன்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார். காஞ்சனாதேவி துக்கத்தின் சிகரமாக விளங்கினாள். அன்று பகல் உணவு கூட அருந்த மறுத்தாள். பணிப்பெண்களை வெறுத்தாள். அறைக்கு வெளியே இருக்கக் கட்டளையிட்டாள். பஞ்சணையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள்.

இளைய பல்லவனுக்கு நேர இருந்த கதி அவனை ஓர் உலுக்கு உலுக்கியிருந்தது. அவள் வேதனையைச் சகிக்க இஷ்டப்படாது போல் பொழுது வேகமாக ஓடி விளக்கு வைக்கும் நேரமும் வந்தது. காஞ்சனாதேவியின் அறையிலும் ஒரு விளக்கு எரியத்தான் செய்தது. அந்தச் சுடர் போல தன் வாழ்க்கை விளக்கு எரியுமா? அணையுமா? என்பதை நினைத்து அவள் விளக்கின் சுடரை நோக்கிக் கொண்டிருந்த சமயத்தில்தான் இளையபல்லவன் அவள் அறைக்குள் நுழைந்தான்.

அவன் தனியாக நுழையவில்லை. கையிலே ஒன்றும் தவழ்ந்து நின்றது. அதைக் கண்டதும் பொலபொலவெனக் கண்ணீரை உகுத்தாள் அவள்.

அது ஆனந்தக்கண்ணீரா, சோகக் கண்ணீரா, பெரும் விந்தையைக் கண்டதால் ஏற்பட்ட கண்ணீரோ! இதயத்தில் வேதனை விளைந்ததால் ஏற்பட்ட கண்ணீரா! அவளுக்கே புலப்படவில்லை. அவன் கையையே வெறித்து நோக்கினாள் அவள்.

அவன் கை சொன்ன கதைதான் என்ன?

### வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!

அறை விளக்கின் சுடரிலிருந்து அஞ்சன விழிகளை இளையபல்லவனின் கையை நோக்கித் திருப்பிய காஞ்சனாதேவி தனது கண்களிலிருந்து திடீரெனப் பொலபொலவென உதிர்ந்து கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீருக்குக் காரணம் கற்பிக்க முடியாமல் திண்டாடினாள்.

அது வாழ்க்கையின் சோதனையளித்த வேதனைக் கண்ணீரா? அல்லது இதயத்தின் மகிழ்ச்சி நிரம்பி வழிந்த இன்பக் கண்ணீரா? என்பதை அவள் சொந்த உணர்ச்சிகளே கண்டுபிடித்துச் சொல்ல முடியாத குழப்ப நிலையில் இருந்தாள் அவள்.

இளைய பல்லவனின் இடது கையிலே தவழ்ந்து நின்ற வெண்மையான அந்தப் பெரும் காட்டுப் புறாவும் அதன் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த அந்த வாலிப வீரனின் வலது கரமும் சொன்னவை பழங்கதைதான். ஆனால் அவற்றில் எத்தனை புதுமைகளைக் கண்டாள் கடாரத்தின் அந்தக் கட்டழகி.

'இவர் கையிலே இன்று தவழும்' இந்தக் காட்டுப் புறா மூன்று நாட்களுக்கு முந்திய இரவில் எத்தனை வேகமாக சாளரத்துக்குள் பறந்து வந்தது! அது கையை லாவகமாக பிடித்தார் இவர்! பிடித்ததும் எத்தனை நேரம் உற்றுப் பார்த்தார். உற்று மட்டுமா பார்த்தார்.

இறக்கைகளைத் தூக்கித் தூக்கி விரல்களால் என்னென்ன சோதனைகளைச் செய்தார்! செய்தவர் அடுத்தடுத்து என்னை ஏன் பார்த்தார்? என்று தன் மனத்துக்குள்ளே கேள்விகளைத் திரும்பத் திரும்ப வீசிக்கொண்ட காஞ்சனாதேவி, ஒரு புருஷன் ஒரு பெண்ணை எத்தனை சீக்கிரம் வசியம் செய்து விட முடியும் என்பதையும் நினைத்து உள்ளூர வியந்தாள்.


அந்த வியப்பில், வியப்பில் விளைந்த காதலில், காதலில் விளைந்த தாபத்தில் அவள் மேற்கொண்டும் அந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தொகுத்து நினைந்து நினைந்து உருகினாள். அதே இரவில் அந்தக் காட்டுப் புறா சிறகடித்து இளைய பல்லவன் அறையை நோக்கி ஓடியது.

அதைத் தான் துரத்தியது. புறா இளைய பல்லவனை மூக்கால் கொத்தியது. புறாவை எடுத்து அவன் தன்னிடம் அளித்தது ஆகிய அத்தனை காட்சிகளும் அவள் சிந்தனையில் வலம் வந்தன. புறாவை தான் அவர் கொடுத்தார்! நான் அதை ஏன் வாங்கி மார்பில் அணைத்துக் கொண்டேன்?

(தொடரும்...)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : திருடாதே
இயற்றியவர் : பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
இசை : எஸ்.எம்.சுப்பையா நாயுடு
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



திருடாதே பாப்பா திருடாதே
திருடாதே பாப்பா திருடாதே

வறுமை நிலைக்கு பயந்துவிடாதே....
வறுமை நிலைக்கு பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே
திருடாதே பாப்பா திருடாதே.....

சிந்தித்து பார்த்து செய்கையை மாற்று
சிறுசாய் இருக்கையில் திருத்திக்கோ –தவறு
சிறுசாய் இருக்கையில் திருத்திக்கோ...(2)

தெரிஞ்சும் தெரியாம நடந்திருந்தா
அது திரும்பவும் வராம பார்த்துக்கோ ...(2 )
திருடாதே பாப்பா திருடாதே.......

திட்டம் போட்டு திருடுற கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது
திட்டம் போட்டு திருடுற கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது –அதை
சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்
தடுத்துக்கொண்டே இருக்குது

சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்
தடுத்துக்கொண்டே இருக்குது
திருடராய்ப் பார்த்து திருந்தா விட்டால்
திருட்டை ஒழிக்க முடியாது .....(2)
திருடாதே பாப்பா திருடாதே......

கொடுக்கிற காலம் நெருங்குவதால்
இனி எடுக்கிற அவசியம் இருக்காது
கொடுக்கிற காலம் நெருங்குவதால்
இனி எடுக்கிற அவசியம் இருக்காது
இனி எடுக்கிற அவசியம் இருக்காது

இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்....
இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்கிற வேலையும் இருக்காது
பொறுக்கிற வேலையும் இருக்காது....

உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டால்...ஆ ஆ...ஆ
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டால்
கெடுக்கிற நோக்கம் வளராது .....


மனம் கீழும் மேலும் புரளாது
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டால்...ஆ ஆ...ஆ
உழைக்கிற நோக்கம் உறுதியாயிட்டால்
கெடுக்கிற நோக்கம் வளராது .....
திருடாதே பாப்பா திருடாதே

வறுமை நிலைக்கு பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே
திருடாதே பாப்பா திருடாதே.....
பாப்பா திருடாதே.....

# ஒரு மொழியின் சிதைவு அவ் இனத்தின் அழிவே

**ஒரு பிடி அரிசிக்கும் ஒரு கட்டி உப்புக்கும் தங்கள் தாய் மொழியை விட்டு அந்நிய மொழியில் கூச்சல் போடும் இனம். தன் சொந்த மண்ணில் அந்நிய மொழிக்கு இரையாகிப் போவதைத் தவிர வேறு வழியில்லை.**

உலகின் தொன்மையான மொழிகள் எல்லாம் பிரம்மத்திலிருந்தே உற்பத்தியாகின்றது. அதனால் அந்த மொழிகளும் பிரம்மமாகும். மொழிகள் பூமியில் பெண் மக்கள் என்றால் அதன் செயல்கள் எல்லாம் ஆண்மக்கள் என அழைக் கப்படும். இதுவே மொழிகளைப் பற்றிய சனாதன தர்மத்தினுடைய பண்டைய உபநிடதத்தின் உயர் சிந்தனையாகும்.



இறைவனால் படைக்கப்பட்ட சில மொழிகள்தான் இந்த உலகத்தின் மண்ணையும் மனித மனதையும் ஆள்கின்றது. அதனால் அந்த மொழிகள் தெய்வீகத் தன்மை வாய்ந்ததாக ஞானிகளால் கணிக்கப்படுகின்றது. மொழிகள்தான் ஒவ்வொரு இனத்தையும் வெளியுலகுக்கு அடையாளம் காட்டுகின்றது. மொழியை அடிப் படையாக வைத்தே ஒரு இனம் சகல பரிமாணங்களிலும் கட்டமைக்கப்படுகின்றது. மொழியின் சுதந்திரமே ஒரு இனத்தின் சுதந்திரமாக இறுதியில் மாற்றம் காண்கின்றது.

ஒரு இனத்தின் இதயமாக அதன் குறியீடாக பார்க்கப்படுவது அவ்வினம் பேசும் மொழிதான். அந்த மொழி பலவிதமான பிரிவினைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தேசத்தில் சிதைய ஆரம்பித்தால் அந்த மொழியைப் பின்பற்றும் இனமும் அந்த தேசத்தில் படிப்படியாக அழிந்து விடுகின்றது. ஒரு மொழி எந்தளவுக்கு தன்னை விரிவாக்கம் செய்கின்றதோ அந்தளவுக்கு அவ்வினத்தின் மொழிப் பரப்பும் விரிவடைகின்றது. ஒரு மொழி எந்தளவுக்கு சுருங்குகின்றதோ அந்தளவுக்கு அந்த இனத்தினுடைய மொழிப்பரப்பும் நிலப்பரப்பும் சுருங்கி தன் சுயத்தை இழந்து விடுகின்றது.

சில தேசங்களில் வாழும் சிறுபான்மை இனத்தினுடைய தாய் மொழியானது ஆட்சி மொழியாகவோ, அதிகார மொழியாகவோ, வழிபாட்டு மொழியாகவோ, பண்பாட்டு மொழியாகவோ, பயன்பாட்டு மொழியாகவோ, பேச்சு மொழியாகவோ, எழுத்து மொழியாகவோ எங்குமே அங்கீகரிக்கப்படவில்லை எனின் அந்த மொழியானது சிதைவை நோக்கி பயணிக்கின்றது என்ற கருத்தியல் நோக்கில்தான் உலக மொழி வல்லுநர்களால் பார்க்கப்படும். சிதைந்து போகும் தங்கள் மொழிகளை எல்லாம் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு சிறுபான்மை இனத்தின் முன்னால் உள்ள மாபெரும் கடமையாகும்.

தன் சொந்த மண்ணையும் அதன் அரசியல் உரிமையையும் நிலை நிறுத்துவதற்காக ஒரு இனம் உலகில் தனது மொழியை முன்னிறுத்தியே பெரும் பாலும் செயலாற்றுகின்றது. மொழியின் பலமே அந்த மண்ணினுடைய மக்களின் பலமாகின்றது. மொழியின் பலம் பலவீனமாகின்ற பொழுது அவ்வினத்தின் பலம் அடியோடு பயனற்றுப் போகின்றது. இது உலகில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் பொருந்தக் கூடியது.

சிறு கொடிபோல் இந்த பூமிப் பந்தில் எங்கும் படர்ந்திருக்கும் சிறுபான்மை இனங்கள். தங்கள் மொழியின் மீது எப்போதும் விழிப் பாக இருக்கவேண்டும். மொழியை எப்போதும் உயிர்ப்பாக வைத்திருக்க வேண்டும். தங்கள் மொழியின் பிரயோகத்துக்குள் அந்நிய மொழிகளின் ஆதிக்கம் ஊடறுப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். கலப்பட மற்ற மொழிக் கொள்கையின் அடிப்படையில் வாழும் ஓர் இனம் காலங்கள் கடந்தும் சரித்திரம் படைக்கும்.

இயற்கையின் படைப்பான பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் மொழிகள் உண்டு. அவை தங்கள் மொழியை எப்போதும் மாற்றுவதில்லை. ஆனால் ஆறறிவு படைத்த மனித இனம் மட்டுமே தம் மொழிப் பிரயோகங்களை அடிக்கடி மாற்றுகின்றது.

ஒரு பிடி அரிசிக்கும் ஒரு கட்டி உப்புக்கும் தங்கள் தாய் மொழியை விட்டு அந்நிய மொழியில் கூச்சல் போடும் இனம். தன் சொந்த மண்ணில் அந்நிய மொழிக்கு இரையாகிப் போவதைத் தவிர வேறு வழியில்லை.

ஒரு மனிதன் தான் பிறந்த தாய் மண்ணை மறக்கும் செயலானதும் தன் தாய் மொழியை தன் நாவிலிருந்து அகற்றும் செயலானதும் தன் தாயின் பாலுக்குப் பதிலாக கழுதையின் பாலை பருகுவதற்கு சமமாகி விடுகின்றது என்பதை எந்த இனத்தில் வாழும் மனிதனும் மறந்து விடக் கூடாது.

சாம் -ரமேஸ்குமார்

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 261

# மருத்துவம் சம்பந்தமான சில அடிப்படை உரிமைகள்

வைத்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களைத் தேடிக் கொள்பவர்கள் எத்தனைபேர்? வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத் தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை? இரகசியம் பேணப்பட வேண்டிய மருத்துவத் தகவல்கள் அம்பலப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்து வரும் சுகாதாரத் தாக்கங்கள் எத்தனை? தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டு வரும் பாதிப்புக்கள் எத்தனை?.

நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வுபூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும், கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தகவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும்.

18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் உரிமை இருக்கின்றது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன் மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவத் தகவல்களை தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள், எதிரிகள், விடுப்பு விசாரிப்போர் போன்ற பலதரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியா கவும் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மருத்துவக்குழுவிடம் நோயுற்றவரின் நோய்நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்து வருகின்றது. அத்துடன் நிவாரணம் பெறுவ தற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும், குடும்பத்தவரின் தொழில் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித் தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

சில சமயம் ஊடகங்கள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக "AIDS நோயாளி வைத்தியசாலையில் அனுமதி", "பாலியல் துஷ்பிர யோகத்திற்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை", "சட்ட விரோத கருக்கலைப்பு பெண் ஆபத்தான நிலையில் அனுமதி" போன்ற செய்திகள் சர்வசாதாரணமாகி வருகின்றது.

தமது நோய்நிலை அம்பலப்படுத்தப்பட்டு விடும் என்று அஞ்சி பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டு வருகின்றன.

மருத்துவக்குழு நோயுற்றவர்களுக்கு சொல்வது ஆலோசனைகளே தவிர கட்டளைகள் அல்ல. அது அவரது மருந்துகள் சம்பந்தமாக இருந்தாலும் சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக இருந்தாலும் மருத்துவக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டு இறுதித் தீர்மானம்எடுக்கும்உரிமை நோயுற்றவர்களுக்கே இருக்கின்றது.

அந்த ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் கூட கோபித்துக் கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை. உதாரணமாக ஒருவர் கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக பாவிக்காது உடற்பயிற்சியோ உணவுக்கட்டுப்பாடோ எதுவும் செய்யாது உடல் பருத்து புகைக்கும் தன் பழக்கத்தையும் தொடர்ந்து கொண்டு குடிபோதையில் மருத்துவரைச் சந்திக்கப் போனால் கூட அவரைக் கோபித்துக் கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

நோயுற்றவருடன் கலந்துரையாடாமல் அவரின் உண்மையான விருப்பு வெறுப்புக்கள் கேட்கப்படாமல் குடும்ப உறுப்பினர்களின் தீர்மானத்தின் பேரில் அவர் மீது பல சிகிச்சை முறைகளும் மற்றைய கவனிப்பு முறைகளும் திணிக்கப்படும் நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு விடுகிறது. ஒருவன் நோய்வாய்ப்பட்டு விட்டான் என்பதற்காக அவனுக்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது.



அந்த வகையிலே நோயுற்றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்து கொள்ளும் உரிமையும் மதிக்கப்பட வேண்டும்.

தனது நோய் நிலை சம்பந்தமான முழு விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, அதற்கு செய்யக்கூடிய வைத்திய முறைகளால் ஏற்படக் கூடிய நன்மை, தீமைகள் பற்றி அறிந்து கொள்ளும் உரிமை, ஒவ்வொரு சோதனைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, உடற் பயிற்சி மற்றும் உணவுக்கட்டுப்பாடு நடத்தை மாற்றங்கள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள, பிரதிகூலங்கள் எவை? என்பதை அறிந்து கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை நோயுற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே அவரினால் தனது சிகிச்சை முறைகள் சம்பந்தமான தீர்மானத்தை சரியான முறையில் எடுக்க முடியும். நோயுற்ற ஒருவர் மருந்தை பாவிக்காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திரசிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப்பிடிப்பதற்கு விருப்பப்படலாம். உடலில் வலியை ஏற்படுத்தக்கூடிய சோதனைகளை செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம்.

தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறொரு மருத்துவரின் இரண்டாவது அபிப்பிராயத்தை கேட்க விரும்பலாம், கோயிலுக்குச் சென்று சில சமயப் பெரியவர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்றுவர விருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவ முறைக்கு மாறுவதற்கு விருப்பப்படலாம்.

சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல நினைக்கலாம், உணவுக்கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ள விருப்பப்படலாம். இதுபோன்ற பல விருப்பங்கள் நோய்வாய்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறையிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும் மனநிறைவாகவும் வாழ வேண்டும், வாழ வைக்க வேண்டும் என்பதிலும் இருக்கின்றது. எனவே நோய் வாய்ப்பட்டவர்கள் தமது மனநிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக் குழுவிற்கு தயங்காமல் தெரியப்படுத்த முடியும்.

தமது உண்மையான நிலைப்பாட்டை அல்லது விருப்பங்களை மருத்துவக் குழுவிற்கு சொல்வதனால் அவர்களின் மருத்துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிட முடியாது. மருத்துவக்குழு நோய்வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவு படுத்த இது உதவியாக இருக்கும். சரியான ஆலோசனைகளை நோயுற்றவர் கடைப்பிடிக்காது விட்டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்துவிடுமோ என்ற மனிதாபிமான அடிப்படையிலே நோயுற்றவர்களை கண்டிக்கும் நிகழ்வு பல நடைபெற்ற வண்ணம் தான் இருக்கின்றன.

கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவரை தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்று கொண்டிருக்கும் பொழுது அதனை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பது யாருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவருக்கும் ஏற்படுகிறது. எது எவ்வாறாக இருப்பினும் நோயுற்றவருடன் கோபப்படுவது சரியான செயலாகாது.

மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில் கூட நோய் நிரூபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வர வேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக் கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது. மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதி பெற விருப்பப்படின் எந்தவித மனச்சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதி பெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது.

தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்து கொள்ளும் உரிமை இருக்கிறது. இதற்கு வேறு வைத்தியர்களின் சிபார்சுக் கடிதங்களோ அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை. நோயுற்றவர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது. உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவு களுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்து வச்சிகிச்சை முறை அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக்குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும். ஒருநோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டு விட்டால் அல்லது நோயுற்றவர் இறந்துவிட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக்குழுவின் உள்மனமும் துயரம் கொள்ளும்.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல எந்தத்துறையிலும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக்கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வுகளும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகிறது.

Dr. சி. சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்

# புதிய திரிபுகள் எந்நேரத்திலும் நாட்டிற்குள் ஊடுருவலாம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்



**(கொழும்பு)**

**கொவிட் பெருந்தொற்றின் புதிய திரிபுகள் எந்த நேரத்திலும் நாட்டுக்குள் ஊடுருவ முடியும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

சுற்றுலாப் பயணிகளுக்கு நாடு திறந்து விடப்பட்டுள்ள தாகவும், துறைமுகங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான ஓர் பின்ன ணியில் புதிய திரிபுகள் எந்த நேரத்திலும் நாட்டுக்குள் ஊடுருவி ஆபத்துக்களை விளைவிக்கக் கூடிய சாத்தி யங்கள் உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய திரிபு தாக்கம் பற்றி எதிர்வு கூறல்களை வெளி யிடுவது நடைமுறைச் சாத்திமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையாக தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களும் பூரணமாக சுகாதார வழி காட்டல்களை பின்பற்ற வேண்டியது அவசியமா னது என அவர் குறிப்பிட்டு ள்ளார். அனைவரும் சுகா தார வழிகாட்டல்களை பின் பற்றுவதே நோய்த் தொற்றை கட்டுப்படுத்தக் கூடிய ஒரே வழியெனத் தெரிவித்துள் ளார். நாட்டில் 58 வீதமான வர்களுக்கு இரண்டு தடுப் பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதா கவும் குறிப்பிட்டுள்ளார். (4-5)

## பாராளுமன்ற பொதுமக்கள் கூடத்தை ஜனவரியில் மீளத் திறப்பது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பொதுமக்கள் கூடத்தை மீள திறப்பது குறித்து எதிர்வரும் ஜனவரி மாதம் ஆராயப் படும் என படைக்கள சேவி தர் நரேந்திர பெர்னா ண்டோ தெரிவித்துள் ளார்.

இதற்கமைய பாராளு மன்ற பொதுமக்கள் கூடம் இந்த ஆண்டு திறக்கப்பட மாட்டாதென அவர் குறிப்பி ட்டார்.

கொவிட்-19 பரவலை கருத்திற் கொண்டு கட்சித் தலைவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் இது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வர் என பாரா ளுமன்ற படைக்கள சேவி தர் தெரிவித்தார். (7-5)

# 2015 இற்கு முன்னமே தேர்தலை நடத்திவிட்டு நாட்டை விட்டு ஓடியதே இந்த அரசாங்கம்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர்

(கொழும்பு)

2015 இல் நாட்டை விட்டு ஓடியவர்களே இன்று மீண்டும் ஆட்சியில் உள்ளனர். இது நொண்டி அரசாங்கம். இந்த அரசாங்கத்தால் நாட்டை முறை யாக ஆளமுடியாது." என்று ஜனநாயக மக்கள் முன்னியின் பிரதித் தலைவரும், பாரா ளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

பொருட்களின் விலை உய ர்வுக்கு எதிராக தலவாக்கலை நகரில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரி வித்த அவர், " இந்த அரசா ங்கம் நொண்டி அரசாங்கம். நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாமல், கடன்களை திருப்பி செலுத்த முடியாமல் 2015 இல் முன்கூட்டியே தேர்தலை நடத்திவிட்டு நாட்டைவிட்டு ஓடிய அரசாங்கம்.

அன்று இருந்த நிலைமைதான் இன்றும் இருக்கின்றது.

அப்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்தவர் இன்று நிதி அமைச்சர். அன்று ஜனாதி பதியாக இருந்தவர் இன்று பிரதமர். எனவே, இவர்க ளுக்கு நாட்டை நிர்வகிக்க முடியாது. அதானால்தான் நாட்டு மக்கள் மீது சுமைகளை திணி க்கின்றனர் என்றார். (7-5)



**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த செக்கட்டிப்புலவு அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு லண்டனில் வசிக்கும் து. இரட்ணசிங்கத்தின் நிதிப் பங்களிப்பில் தமிழ் விருட்சம் அமைப்பின் ஊடாக துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (படம்-வசந்தரூபன்)**

## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட / நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுட மையாக்கப்பட்ட மணல் எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளா கத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது என முல் லைத்தீவு மாவட்ட / நீதவான் நீதிமன்ற பதிவாளர் தெரி வித்துள்ளார். (7-5)



கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியினைச் சேர்ந்த பெண் இராணுவ குடும்பத்திற்கு இராணுவத்தினரின் நிதி மற்றும் ஆளணி உதவியுடன் பூரணப்படுத்தப்பட்ட வீடு முல்லைத்தீவு இராணுவ தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ்.பி. ஏ. கே பிலபிரியலவினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. (படம்- சப்தசாங்கரி)

# 80 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவு க்கு உட்பட்ட இராமநாத புரம் அழகாபுரி பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற் பனை நடைபெறு வதாக கிடைக்கப்பெற்ற இர கசிய தகவளுக்கமைய நேற்று முன்தினம் 80 லீற்றர் கசிப் புடன் இருவர் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

அதில் ஒரு வர் 35 லீற்றர் கசிப்பினை மோட் டார் சைக்கிளில் கொண்டு செல்லும்போது இராமநாத புரம் பொலிஸாரினாலும் மற்றுமொருவர் 45 லீற்றர் கசிப்பினை விற்பனைக்கு தயாராக வீடொ ன்றில் மறைத்து வைக்கப்பட்டி ருந்த நிலையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப் பட்ட இருவரும் தருமபுரம் பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர். (7-5-316)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 184 பேருக்கு இழப்பீட்டுக் காசோலைகள் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

கடந்த கால யுத்தம் கார ணமாக இன்னல்களுக்குள் ளான குடும்பங்களுக்கான சொத்தழிவுக்கான இழப்பீட்டு காசோலைகள் வழங்கும் நிக ழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இன்னல்களுக்கு உள்ளான குடும்பங்களாக அடையாளப் படுத்தப்பட்ட 184 குடும்பங்க ளுக்கு நிதி அமைச்சின் கீழ் உள்ள இழப்பீட்டுக்கான அலுவல கத்தால் இந்த இழப்பீட்டுக் காசோலைகள் வழங்கப்பட்டன.



இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபர் க.விமலநாதன், புதுக்குடியிருப்பு பிரதேச செய லாளர் சி.ஜெயகாந்த், கரை துறைப்பற்று பிரதேச செய லாளர் ம.உமாமகள் ஆகி யோர் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கி வைத்தனர். (7-5-281)

# சீனாவால் இலங்கை பாரிய வெளிநாட்டுக் கடனுக்குள் தள்ளப்பட்டுள்ளது

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

**சீனாவின் உட்கட்டுமான கடன் உதவி காரணமாக இலங்கை பாரிய வெளிநாட்டுக் கடனுக்குள் தள்ளப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை மத்திய வங்கியினால் அச்சடித்து வெளியிடப்படும் அதிக நாணயத்தாள் காரணமாகவும், இலங்கை பாரிய பொருளாதார வங்குரோத்து நிலைக்குள் தள்ளப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.சர்வதேச நாணயம் நிதியம் நாடுகளின் பொருளாதார அபி விருத்தி தொடர்பான அறிக்கை ஒன்றினை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3.6 ஆக அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளதுடன், பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருப்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் உலக அளவிலும், இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வெளிநாடுகளினால் வழங்கப்பட்டு வரும் நிதியளிப்புக்கள் திடீர் என நிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் பாரிய பொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என உலக வங்கியும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும் ஆசியக் கண்டத்தில் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் பாரிய நிதி நெருக்கடிக்குள் சிக்கித் தவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)

# நாட்டை கட்டியெழுப்ப ஐ.தே.கவுடன் இணையுங்கள்

## அகிலவிராஜ்

(கொழும்பு)

வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டமும் உறுதியான கொள்கையும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விரக்தியடைந்திருக்கும் மக்கள் இந்த அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்கு நீண்டகாலம் செல்லாது என அக்கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் முறையான திட்டங்கள் நாட்டை கட்டியெழுப்ப மக்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் கைகோர்த்துக்கொள்ள முன்வரவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார். (4-5)

# பசுமை விவசாயம் தொடர்பான ஜனாதிபதி செயலணி ஸ்தாபிப்பு

(கொழும்பு)

பசுமை விவசாயம் தொடர்பான 14 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணி ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விஜித் வெலிகல தலைமையில் குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக ஜனாதிபதியின் செயலாளர் கையொப்பமிட்டுள்ள வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி லலித் செனவிரத்ன, கசுன் தாரகா அமல், மலிந்த செனவிரத்ன, ரசிக துசித குமார, பேராசிரியர் பி.கே.ஜி காவந்திஸ்ஸா, சமந்தா பெர்னாண்டோ, சமுதித குமாரசிங்க, அஜித் ரண்துனு, என்.எம் காலித், ஷம்மி கிரிண்டே, நிர்மலா கரவ்கொட, சமிந்த ஹெட்டிகன்கனமேங்கே ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (4-5)

# சினோபார்ம் இரு டோஸ் பெற்றவர் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்தது

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் தடுப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இந்த வேலைத்திட்டத்தின் கீழ், நாட்டில் சினோபார்மின் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது.

அதற்கமைய, நாட்டில் சினோபார்ம் பூரணத் தடுப்பூசி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை நேற்று முன்தினம் இவ்வாறு ஒரு கோடியைக் கடந்ததாக ஔடத உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். (4-5)

# இன்று ஒரு தகவல்

## பொறாமையும் போட்டி மனப்பான்மையும்

சிலர் தம்மை விட வசதியாக இருப்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். தம்மை விட மேலான பதவியில் இருப்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள்.

தம்மை விட அழகாக இருப்பவர்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள்.

ஆனால் இவர்கள் பொறாமையைக் கைவிட்டுவிட்டுப் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொண்டுவிட்டால் அழகைத் தவிர மற்ற இரண்டையும் பெற்றுவிடலாம்; சுலபம்.

ஓட்டப் பந்தயத்தில் முன் வரிசையில் ஓடிக்கொண்டிருக்கும் ஒருவனைப் பார்த்துப் பின்னால் ஓடி வந்து கொண்டிருக்கும் ஒருவன் அடுத்த ரவுண்டிற்குள் அவனை முந்திவிட வேண்டும் என்று மனப்பூர்வமாக எண்ணி, இன்னும் முயற்சி செய்து ஓடுகிறான் என்றால், அது போட்டி மனப்பான்மை.

அதை விட்டுவிட்டு, இந்தப்பயல் இந்த ஓட்டம் ஓடுகிறானே, எல்லாரும் இவனைப் பாராட்டும் வகையில் கை தட்டுகிறார்களே என்று பார்வையாளர்கள் காலரியில் உட்கார்ந்து கொண்டு ஒருவன் உள்ளூர எண்ணிக் கொண்டிருந்தால் அது பொறாமை.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் எதிரியைப்போல் நாமும் உயர வேண்டும் என்று முயற்சி மேற்கொள்வது, போட்டி மனப்பான்மை.

அவனது வளர்ச்சியை வேண்டா வெறுப்பாக எண்ணிப் பார்ப்பது பொறாமை. மற்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறவர்களால் ஒருகாலமும் மகிழ்ச்சியாக இருக்க முடியாது. அவர்களால் முன்னுக்கு வருவதும் கடினம்.

பொறாமைக்கு உரியவர்களைப் பாராட்டத் தொடங்கிவிட்டால் நல்லதொரு திருப்பம் ஏற்படுவது நிச்சயம். பொறாமைக்காரர்களும் இன்னொரு வகையினர் இருக்கிறார்கள். அவர்கள் அழிவு வேலையிலும் இறங்குவார்கள் அத்தகைய மனப்பான்மையை வளர்த்துக்கொண்டு விட்டவர்களால் மன அமைதியோடு வாழ முடியாது. தாமும் முன்னேறாமல் மன அமைதியோடு வாழ முடியாது. தாமும் முன்னேறாமல் மன அமைதியையும் கெடுத்துக் கொள்பவர்களைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது.

வாழ்க்கையில் முன்னுக்கு வந்து விட்டவர்களின் திறமையைக் கண்டு வியந்து, பாராட்டி அங்கீகரிப்பவர்கள் தான் முன்னுக்கு வருகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# தேவையேற்படின் பாடசாலை மாணவர்களுக்கும் பூஸ்டர்

## விசேட வைத்திய நிபுணர்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் தடுப்பூச்சியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கொரோனாத் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட அவர், நாளை திங்கட்கிழமை, மேலும் 6 இலட்சம் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# அரசின் சலுகைகளை ஏற்று ஆசிரியர்கள் விரைவில் பணிக்கு திரும்புவர்

## பந்துல நம்பிக்கை



(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சலுகைகளை ஏற்றுக் கொண்டு, அனைத்து ஆசிரியர்களும் உடனடியாக பணிக்கு திரும்புவார்கள் என எதிர்ப்பார்ப்பதாக வர்த்தக அமைச்சரான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

அரசாங்க வருவாயில் சிக்கல்கள் இருந்தாலும் தாமதமான சம்பளத் தொகையை இரு சமமான கொடுப்பனவுகளில் செலுத்தி திருத்தங்களைச் செய்ய பிரதமர் ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் உடன்பாட்டை எட்டினாலும், ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது மற்றும் கல்வி இல்லாமல் மாணவர்கள் பாதிக்கப்படுவது நியாயமற்றது என்றும் அவர் வலியுறுத்தினார். (4-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## ஆனந்தம் தரும் அனுமன் வழிபாடு



முழுமுதற்கடவுளான பரமேஸ்வரன் அபிஷேகப்பிரியர். காக்கும் கடவுளான திருமாலோ அலங்காரப்பிரியர்.

சொல்லின் செல்வன் அனுமனோ ஸ்தோத்திரப்பிரியர் ஆவார். ராமநாமத்தின் உயிர் உருவமான அவர் தமது செவிகளில் ராமநாமமே ஒலிக்க வேண்டும் என்று விரும்புவார்.

சிரஞ்சீவி அனுமன் வாயு தேவனுக்கும், அஞ்சனா தேவிக்கும் மார்கழி மாதம் மூல நட்சத்திரத்தில் மகனாகப் பிறந்தார். அன்றைய தினம் அனுமன் ஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது.

திரேதாயுகத்தில் குஞ்சரன் என்ற சிவபக்தன் வெகுகாலமாக குழந்தை இல்லாமல் வருந்தினார். அதனால் துயருற்ற அவர் சிவபெருமானை நோக்கி தவம்புரிய, ஜோதிச்சுடரான சிவபெருமான் அவர் முன் தோன்றி, 'உனக் கொரு மகள் பிறப்பாள். அவளுக்கு, அவள் விரும்பியபடி ஒரு மகன் பிறப்பான்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 'அயன்' பட பாணியில் போதைப்பொருள் கடத்தல்

### உகண்டாப் பெண் கைது

(கொழும்பு)

சுமார் 100 கொக்கேய்ன் போதைப்பொருள் உருண்டைகளை விழுங்கிய நிலையில் நாட்டுக்கு வந்த உகண்டா நாட்டு பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் அவரை ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனையிட்ட போது இந்த கொக்கேய்ன் தொகை அவரின் வயிற்றில் மறைத்து வைத்து கொண்டு வரப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (4-5)

## திருட்டுக்கும்பல் சிக்கியது

### அறுவர் கைது

### 20 முச்சக்கர வண்டிகள் மீட்பு

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தின் ஜாஎல, கந்தானை, ஏக்கல உள்ளிட்ட பகுதிகளை அண்மித்து முச்சக்கர வண்டிகளை திருடி, அவற்றை விற்பனை செய்து வந்த கும்பலொன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளது.

6 சந்தேக நபர்களைக் கொண்ட இந்தக் கும்பல் திருடியதாக கருதப்படும் 20 முச்சக்கர வண்டிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

திட்டமிட்ட வகையில் இந்த நடவடிக்கையை குறித்த குழு முன்னெடுத்துச் சென்ற நிலையிலேயே ஜாஎல பொலிஸாரின் சூட்சுமமான விசாரணைகளில், அக்குழுவைக் கைதுசெய்ய முடிந்ததாக ஜாஎல பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார். (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 200 | 170 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 140 | 80 | 100 | 180 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 150 | 140 | 150 | 160 |
| கரட் | 100 | 160 | 200 | 160 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 160 | 140 | 120 | 150 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 160 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 150 | 170 |
| பாகற்காய் | 400 | 600 | 500 | 480 |
| வெண்டிக்காய் | 120 | 140 | 60 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 280 | 300 | 170 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 200 | 250 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 280 | 300 |
| போஞ்சி | 200 | 250 | 350 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 180 | — | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | — | 300 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 350 | 300 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 120 | — | 120 |

# அணுசக்திப் பேச்சுக்கு ஈரான் உடன்படாவிட்டால் மாற்று நடவடிக்கை எடுக்கப்படும்

## அமெரிக்கா, இஸ்ரேல் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**ஈரான் விரைவில் பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால் ராஜ்ய ரீதியில் அல்லாத பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் தற்போது எச்சரித்துள்ளன.**



அணுசக்திப் பேச்சுவார்த்தைக்கு ஈரான் திரும்பாவிட்டால் அந்த நாட்டுக்கு எதிரான 'மாற்று' நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் எச்சரித்துள்ளன.

அமெரிக்கா வந்துள்ள இஸ்ரேல் வெளியுறவுத்துறை அமைச்சர் யாயிர் லாபிடும் அமெரிக்க வெளியுறவுத் துறை ஆன்டனி பிளிங்கனும் வெளியிட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர். இது குறித்து பிளிங்கன் கூறியதாவது,

இப்போதைய நிலைப்பாட்டை மாற்ற ஈரான் தவறினால், அந்த நாட்டுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய 'மாற்று' நடவடிக்கைகள் குறித்து கூட்டணி நாடுகளுடன் ஆலோசித்து வருகிறோம்.

இந்த விவகாரத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுதான் அதிக பலனை அளிக்கும் என்று இப்போதும் நம்புகிறோம். ஆனால், பேச்சுவார்த்தையைப் பொருத்தவரை அதில் இரு தரப்பினரும் பங்கேற்க வேண்டும். இப்போதைய நிலையில் ஈரான் அதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை என்றார்.

யாயில் லாபிட் கூறுகையில், 'ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுத்து நிறுத்துவதற்காக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். தேவைப்பட்டால் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளையும் எடுக்க இஸ்ரேல் தயங்காது.

ஈரான் போன்ற பயங்கரவாத அரசு அணு ஆயுதம் பெறுவதை இந்த உலகம் அனுமதிக்காது என்பதை ஈரானுக்குப் புரியவைக்க வேண்டும். அதனை உணராதவரை, அந்த நாடு அணு ஆயுதத்தை நோக்கிய தனது பயணத்தைத் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்' என்றார்.

ஈரான் மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிப்பது, இரகசிய அல்லது வெளிப்படையான இராணுவ நடவடிக்கைகள் என பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அந்த நாடுகள் பரிசீலிக்கும் என்று கூறப்படுகிறது. (7-5)

## சீனாவில் குரான் செயலியை நீக்கிய அப்பிள் நிறுவனம்

(பீஜிங்)

உலகின் மிகப் பிரபலமான குரான் செயலிகளில் ஒன்றான "குரான் மஜீத் **(Quran Majeed)** என்கிற தன் செயலியை சீனாவில் உள்ள பயனர்களுக்கான அப்ஸ்டோரில் இருந்து நீக்கியுள்ளது அப்பிள் நிறுவனம்.

குறித்த செயலியை சீனாவில் சுமார் 10 இலட்சம் பயனர்கள் பயன்படுத்தியதாக அச்செயலியை உருவாக்கிய பி.டி.எம்.எஸ் நிறுவனம் கூறியுள்ளது.

சட்டவிரோதமான மதம் சார்ந்த எழுத்துகள் இடம் பெற்றிருந்ததால் இந்த செயலி நீக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-5)

## கனடாவில் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான புதிய அமைச்சரவை

(ஒட்டாவா)

கனடாவில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான புதிய அமைச்சரவை இந்த மாதம் 26 ஆம் திகதி அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், புதிய பாராளுமன்றத்தை இம் மாதம் 22 ஆம் திகதி கூட்ட முடியும் என நம்புவதாக ட்ரூடோ அறிவித்துள்ளார்.

கனடா பாராளுமன்றத்தைக் கலைத்து முன்கூட்டியே தேர்தல் நடத்தப்பட்டபோதும் பிரதமர் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கத்தினால் மீண்டும் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றையே அமைக்க முடிந்துள்ளது. இந்நிலையில் கனேடிய அரசின் தற்போதைய முன்னுரிமையாக கொவிட் -19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் உள்ளது.

இதேவேளை, அனைத்து கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களும் தடுப்பூசி பெற்றுக் கொள்வதை உறுதி செய்ய விரும்புவதாக பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இதற்காக ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்பு புவதாகவும் அவர் கூறினார்.

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னுதாரணமாக இருப்பார்கள் என்று கனேடியர்கள் எதிர்பார்க்கிறார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் கட்டாய தடுப்பூசிக் கொள்கைக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் தலைவர் எரின் ஓ'டூல் கருத்து வெளியிட்டு வருகிறார்.

கட்டாய தடுப்பூசி திட்டத்துக்குப் பதிலாக கொவிட்19 பரிசோதனைகளை அதிகரிக்கும் திட்டத்தை அவர் வலியுறுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-5)

## ஆப்கான் மசூதியில் தற்கொலைத்தாக்குதல் 47 பேர் உயிரிழப்பு;70 பேர் படுகாயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஷியா இஸ்லாமியப் பிரிவினருக்கான மசூதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 37 பேர் பலியாகினர் 70 பேர் காயமடைந்தனர். இதுகுறித்து அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது,

கந்தஹார் நகரிலுள்ள இமாம் பாகா மசூதியில் வாரந்தோறும் நடைபெறும் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது தற்கொலைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

ஷியா பிரிவினருக்கான அந்த மசூதியில், உடலில் வெடிகுண்டை மறைத்துவைத்திருந்த பயங்கரவாதிகள் அதனை வெடிக்கச் செய்து இந்தத் தாக்குதலை நடத்தினர்.

எனினும், தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை என்றும் அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


குண்டூஸ் மாகாணத் தலைநகர் குண்டூஸிலுள்ள ஷியா பிரிவு மசூதியில் கடந்த வாரம் நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 46 பேர் பலியாகினர். அந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பின் ஆப்கான் பிரிவான ஐ.எஸ். பொறுப்பேற்றது.

இந்த நிலையில், ஷியா பிரிவினரைக் குறிவைத்து கந்தஹார் மசூதியில் தற்போது மீண்டும் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலையும் ஐ.எஸ். பயங்கரவாதிகளே நிகழ்த்தியிருப்பார்கள் என்று கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படை வெளியேற்ற நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்தபோது, கடந்த ஓகஸ்ட் மாதம் புதிய பகுதிகளைக் கைப்பற்றி வெகுவேகமாக முன்னேறிய தலிபான்கள், அந்தப் பகுதிகளில் இருந்த சிறைச்சாலைகளில் இருந்து ஐ.எஸ் பயங்கரவாதிகள் உள்ளிட்ட அனைத்து கைதிகளையும் விடுவித்து நினைவுகூரத்தக்கது. (7-5)




## மக்கள் குறைகளைக் கேட்டபோது இங்கிலாந்து எம்.பி.குத்திக்கொலை



(லண்டன்)

பிரிட்டனில் எம்.பி., ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதால் பதற்றம் நிலவுகிறது.

ஐரோப்பிய நாடான பிரிட்டனில், ஆளும் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த டேவிட் அமெஸ், கடந்த 1997 முதல் தொடர்ந்து ஏழுமுறை சவுத் எண்ட் வெஸ்ட் தொகுதியில் இருந்து பாராளுமன்றுக்குத் தேர்வானவர் ஆவார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் டேவிட், தன் தொகுதி மக்களை நேரில் சந்தித்துப் பேசினார்.

அப்போது அங்கிருந்த இளைஞர் ஒருவர், டேவிட்டை கத்தியால் சரமாரியாகக் குத்தினார்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த டேவிட்டை, பொலிஸார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். எனினும் செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

இதற்கிடையே தாக்குதல் நடத்திய இளைஞரை, பொலிஸார் கைது செய்து அவரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் பிரிட்டனில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (7-5)

வாழ்வின் வெற்றி என்பது ஒரு மனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.
~ ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மணல் தேவையைப் பூர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுங்கள்

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல் மண்ணைப் பெற்றுக் கொள்வதில் வடபகுதி மக்கள் மிகப்பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

உரிய அனுமதிகளின் கீழ் மண்ணைப் பெற்றுக்கொள்கின்ற நடைமுறை இருந்தபோது மிகக் குறைந்த விலையில் மண்ணைப் பெற முடிந்தது.

ஆனால் அந்த நடைமுறை நிறுத்தப்பட்டதன் பின்னர், அதிகூடிய விலை கொடுத்து மணல் மண்ணைப் பெறவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக வீடற்றவர்கள் வீட்டை நிர்மாணிக்கும்போது பணக் கஷ்டத்துக்கு ஆளாகிக் கடன்படுநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

உண்மையில் கட்டுமானப் பணிகளுக்கான மணல் தேவையை சாத்தியமான வழிமுறையினூடாக நிறைவேற்றும்போது மக்களின் பணக் கஷ்டத்தை ஓரளவுக்கேனும் தடுக்க முடியும்.

இவ்வாறு கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணலை வழங்குவதற்கு எங்களிடம் போதிய மண் வளம் இல்லை என்று கூறப்படுமாயின், வீடு கட்டுகின்றவர்களின் மணல் தேவையையேனும் பூர்த்தி செய்கின்ற ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்தாக வேண்டும்.

எனினும் அவை எதுவும் இதுவரை அமுலாகவில்லை.

அண்மையில் நடந்த கூட்டமொன்றில் கருத்துரைத்த யாழ்.மாவட்ட அரச அதிபர்; மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறியிருந்தார்.

அவரின் மேற்போந்த கருத்து மக்களுக்கு ஆறுதலைத் தந்துள்ளது.

எனினும் அது விடயத்தில் காலதாமதங்கள் ஏற்படாமல் விரைவாக மணல் மண்ணை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும்.

இதுவிடயத்தில் புதிய ஆளுநரின் கவனத்தை ஈர்ப்பது கட்டாயமானது.

உண்மையில், வடபகுதியில் மணல் தேவையைப் பூர்த்தி செய்வதில் அரச கட்டமைப்பு இன்மையால், பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

அதாவது மணல் தட்டுப்பாடு காரணமாக அதிகூடிய விலை கொடுத்து மண்ணைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலைமை ஒருபுறமிருக்க,

மறுபுறத்தில் சட்டவிரோத மண் அகழ்வு நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் எனலாம்.

இவ்வாறு சட்டவிரோதமாக மண் அகழ்வு நடப்பதனால், நிலச் சொந்தக்காரர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுகின்ற நிலைமை உருவாகின்றது.

இவை தவிர, சட்டவிரோதமாக மண்ணை எடுத்துச் செல்லும்போது சம்மபந்தப்பட்டவர்களை பொலிஸார் துரத்திச் செல்ல, அவர்கள் வேகமாக ஓடி விபத்துக்கு ஆளாகி இறப்பதும் சிலவேளை அவர்கள் மீது படைத் தரப்பினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த, அதில் பலியாகிப்போவதுமான துன்பங்கள் நடக்கவே செய்கின்றன.

ஆக, இவற்றையெல்லாம் தடுப்பதற்கான ஒரேவழி ஏதோவொரு பொறிமுறையூடாக மணல் தேவையைப் பூர்த்தி செய்வதாகும்.

## மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து சேவைகள் 21 முதல் ஆரம்பம்

### போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம

(கொழும்பு)

மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் இம்மாதம் 21ஆம் திகதி முதல் நீக்கப்படாவிட்டால், சிறப்பு அனுமதியின் கீழ் மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவை தொடங்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச தனியார் துறை ஊழியர்களின் பயணத் தேவை உள்ளவர்களுக்காக இத்தகைய பேருந்து சேவை தொடங்கப்படும் என்று திலும் அமுனுகம சுட்டிக்காட்டினார்.

மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகள் 21 ஆம் திகதியிலிருந்து நீக்கப்படும் பட்சத்தில், மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவை வழக்கம் போல் முழுமையாக செயற்படுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

உயரும் வாழ்க்கைச் செலவினால் தாங்கள் பாதிக்கப்படுவதை மக்கள் ஒப்புக்கொள்வதாகவும், அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாட்டை மீட்டெடுக்க அரசு கடுமையாக உழைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

### நவம்பர் 12 முதல் டிசம்பர் 1 வரை

## அரசாங்க முக்கியஸ்தர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை

### ஜனாதிபதி கோட்டா உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 1 ஆம் திகதி வரையில் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவன பிரதானிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இந்த தடை உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

அரச தலைவரின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர வினால் வெளியிடப்பட்ட விசேட சுற்றுநிரூபம் ஒன்றின் மூலம் இந்த தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அது தொடர்பான விவாதங்கள் நடைபெற்று இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், அரச நிறுவன பிரதானிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளக் கூடாது. (ம-3)

## வவுனியாவில் வீடு உடைத்து பணம், நகை கொள்ளை

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் வீடு உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்த பணம் மற்றும் நகை என்பனவற்றைத் திருடிச் சென்றுவிட்டதாக நெலுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது .

நேற்று முன்தினம் பகல் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா - மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் வசித்து வந்த கட்டட ஒப்பந்தக்காரர் தனது குடும்பத்தினருடன் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற மரணவீடு ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

மாலை 6 மணியளவில் வீட்டிற்குத் திரும்பிய போது வீட்டின் முற்றத்தில் அலுமாரியின் பெட்டகத்தின் சிலபகுதிகள் சிதறிக் காணப்பட்டுள்ளது.

இதையடுத்து வீட்டிற்குள் உட்சென்று பார்த்தபோது பின்கதவு உடைக்கப்பட்டு உட்புகுந்த திருடர்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நான்கு பவுண் பெறுமதியான நகைகள் மற்றும் எழுபதாயிரம் ரூபா பணம் என்பனவும் திருடிச் சென்றுள்ளது தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து நெலுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

### நவம்பர் 01 ஆம் திகதி முதல்

## மேலதிக வகுப்புகளை ஆரம்பிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

மேலதிக வகுப்புகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து நிதி அமைச்சர் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்கள் சிலருக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மேலதிக வகுப்புகளை ஆரம்பிப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.


எவ்வாறாயினும், இது தொடர்பில் எதிர்வரும் தினத்தில் சுகாதார அமைச்சருடனும் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், நேற்று முதல் அமுலாகிய புதிய சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் மேலதிக வகுப்புக்களை நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### மருத்துவக் குறிப்பு

ஜாதிக்காயை நசுக்கி இரண்டு குவளை நீர்விட்டு காய்ச்சி ஒரு குவளையாக்கி வாந்திபேதி கண்டவர்களுக்கு 15 நிமிடத்திற்கு ஒருமுறை ஒரு வாய் கொடுத்துவர கொலரா சரியாகும்.

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்.

❖ மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும்

❖ நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்."

❖ "கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை. நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை.

❖ ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்.

❖ நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர்.

❖ தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

21

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



ஆப்கானிஸ்தானில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம்



மேலும் தலிபான்களுக்கு எதிரான மக்கள் எழுச்சிக்கும் வேண்டுகோள்விடுத்தார். அதேநாளில், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், கானி ஜனாதிபதியாக இருக்கும் வரை தலிபான்கள் பேச்சுவார்த்தை நடத்தவோ அல்லது அரசாங்கத்துடன் சமாதான பேச்சுவார்த்தை நடத்தவோ மாட்டார்கள் என்று அறிவித்தார்.

2 ஒகஸ்ட் 2021 அன்று, ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான்களின் முன்னேற்றத்திற்கு அமெரிக்க துருப்புக்கள் திடீரென திரும்பப் பெறுவதை கானி குற்றம் சாட்டினார் மற்றும் தலிபான்கள் பயங்கரவாத அமைப்புகளுடனான உறவை குறைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார். ஒகஸ்ட் 11, 2021 அன்று, கானி உள்ளூர் போர் வீரர்கள் மற்றும் தனியார் போராளிகளிடம் தலிபான் களை எதிர்த்துப் போராடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் கட்டுப்பாட்டை ஒகஸ்ட் 15 அன்று கைப்பற்றினர், அந்த நாளில் கானி பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அன்று, தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய தால் கானி தனது மனைவி மற்றும் இரண்டு நெருங்கிய உதவியாளர்களுடன் ஆப்கானிஸ் தானை விட்டு வெளியேறினார்.

ஆர்க் (Arg), ஜனாதிபதி அரண்மனை, சில மணி நேரம் கழித்து குழுவால் கைப்பற்றப்பட்டது. ஆப்கானிஸ் தானின் அதிகா ரிகள் ஞாயிற்றுக் கிழமை காலை அமெரிக்க தூதரகத்திற்கு செல்வதற்காக ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறியதாகக் கூறினார்.

பின்னர் கானி அவர்கள் முன்னாள் ஜனாதிபதி என்று விபரிக்கப்பட்டார்.

தலிபான்கள் ஆப்கானிஸ்தா னின் கட்டுப்பாட்டை ஒகஸ்ட் 15 அன்று கைப்பற்றினர் . அந்த நாளில் கானி பதவி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அன்று, தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய தால் கானி தனது மனைவி மற்றும் இரண்டு நெருங்கிய உதவியாளர்களுடன் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறினார்.

அந்த நாளின் பிற் பகுதியில், கானி தனது முகநூலில் "ஒரு இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காக தான் வெளியேறுவதுநல்லது என்று நினைத்ததாகவும், மேலும் தலிபான்களை பொது மக்களைப் பாதுகாக்கு மாறும் அழைத்தார், தலிபான்கள் இப்போது "வரலாற்றுச் சோதனையை" எதிர் கொண்டுள்ளதாகக் கூறினார். 18 ஒகஸ்ட் 2021 அன்று, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கானி மற்றும் அவரது குடும்பத்தினர் "மனிதாபிமா னக் கருத்தோடு" அந்த நாட்டில் இருப்பதாக ஒப்புக் கொண்டனர்.

ஒகஸ்ட் 17 அன்று, தலிபான்கள் அரசாங்கத்தை உருவாக்க தீவிரமாக செயல்படுவதாக அறிவித்தனர், அது இனிவரும் நாட்களில் அறிவிக்கப் படும் என்றும் கூறினர். அதே நாளில், முதல் துணைத் தலைவர் அம்ருல்லாசலே, தான் செயல்படாத ஜனாதிபதியாக இருப்பதாகக் கூறினார், (சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி இல்லாவிட்டால், தப் பித்தால், ராஜினாமா செய்தால் அல்லது இறந்தால் முதல் துணைத் தலைவர் செயல் ஜனாதிபதியாவார்). அவர் ஐக்கிய அரபு அமீர

ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி நாட்டைவிட்டு வெளியேறிய பின் காபூலில் உள்ள அவரது மாளிகையை ஆகஸ்ட் 15 -ம் தேதி தலிபான் போராளிகள் கைப்பற்றினர்




அந்த நாளின் பிற்பகுதியில், கானி தனது முகநூலில் "ஒரு இரத்தக் களரியைத் தவிர்ப்பதற்காக தான் வெளியேறுவது நல்லது என்று நினைத்ததாகவும், மேலும் தலிபான்களை பொது மக்களைப் பாதுகாக்கு மாறும் அழைத்தார், தலிபான்கள் இப்போது "வரலாற்றுச் சோதனையை" எதிர் கொண்டுள்ளதாகக் கூறினார்.

18 ஒகஸ்ட் 2021 அன்று, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கானி மற்றும் அவரது குடும்பத்தினர் "மனிதாபிமானக் கருத்தோடு" அந்த நாட்டில் இருப்பதாக ஒப்புக் கொண்டனர்.

கத்தில் இருந்து ஒகஸ்ட் 18 அன்று பதிவு செய்யப்பட்ட முகவரியில், கானி தூக்கிலிடப்படுவதைத் தவிர்ப்பதற்காக தப்பிச் சென்றதாகவும், இறுதியில் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்புவதாக சபதம் செய்ததாகவும் கூறினார்.

### கானி மீது சுமத்தப்பட்டுள்ள இன்றைய குற்றச்சாட்டு

அவர் (கானி) தப்பிக்கும்போது, தஜிகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ் தான் தூதரகம், பொது நிதியை மோசடி செய்ததற்காக அவரை கைது செய்யுமாறு இன்டர் போலி ட்ம் கேட்டது.

ஆப்கானின் முதல் துணைத் தலைவர் அம்ருல்லா சலே



ஒகஸ்ட் 17 அன்று ஆப்கானின் முதல் துணைத் தலைவர் அம்ருல்லாசலே, தான் செயல்படாத ஆப்கான் ஜனாதிபதியாக இருப்பதாக அறிவித்தார். (சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி இல்லாவிட்டால், தப்பித்தால், இராஜினாமா செய்தால் அல்லது இறந்தால் முதல் துணைத் தலைவர் செயல் ஜனாதிபதியாவார்). அம்ருல்லாசலே இதுவரை தலிபான்களால் கைப்பற்றப்படாத பஞ்ஷீர் மாகாணத்தில் இருக்கின்றார்.

காபூலில் உள்ள ரஷ்ய தூதரகம், கானி நான்கு கார்கள் மற்றும் ஒரு ஹெலிகொப்டரில் முழு (பண) ரொக்கத்துடன் தப்பிச் சென்றதாகவும், எல்லாவற்றையும் எடுத் துச் செல்ல முடியாததால் சிறிது பணத்தை விட்டுச் செல்ல நேர்ந்ததாகவும் குற்றம் சாட்டினார். இக்கட்டான சூழ்நிலையில் ஆப்கானிஸ்தானை விட்டு தப்பிச்சென்ற ஜனாதிபதி அஷ்ரப் கானி மீது பல்வேறு தரப்பிலிருந்தும் விமர் சனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், ஐக்கிய அமீரகத்தில் தஞ்சமடைந்துள்ள அஷ்ரப் கானி தனது சமூகவலைதளப் பக்கம் மூலம் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. அந்த வீடியோவில் அஷ்ரப் கானி கூறியதாவது, "எனது கால ணிகளை கூட அணிய முடியாத சூழ்நிலையில் நான் வெளியேற்றப்பட்டேன்.

உள்ளூர் மொழி பேசத்தெரியாதவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து என்னை தேடினர். நான் வெளியேற்றப்பட்டேன். தான் வெளியேறும் போது கார் முழுக்க பணம் கொண்டு வந்ததாக கூறப்படுவது முழுக்க முழுக்க தவறான தகவல் என்றும் ஆப்கா னிஸ்தான் ஜகாதிபதியாக இருந்த அஷ்ரப்கானி மறுப்பு தெரிவித்துள்ளார். "ஜனாதிபதி கானியை வெளியேற சொன்னதை அடுத்து நாட்டை விட்டு வெளியேறி விட்டேன்.

(தொடரும்...)

## திருக்கேதீஸ்...

வடக்கு மாகாண ஆளுநர் மன்னார் மாவட்டத்தில் உள்ள திருக்கேதீஸ்வர சிவன் ஆலயத்திற்கு விஜயம் மேற் கொண்டு ஆலய பூசை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

கடந்த வாரம் ஜனாதிபதியினால் வடக்கு மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டதை அடுத்து கொழும்பு வடக்கு ஆளுநர் அலுவலகத் தில் தனது கடமையினை ஆரம்பித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டதோடு,

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத் தில் பூசை வழிபாடுகளில் கலந்து கொண் டார். திருக்கேதீஸ்வர ஆலய பாலாவி தீர்த்தக்கேணியில் குடத்தில் நீரெடுத்து சிவலிங்க பெருமானுக்கு நீர் ஊற்றி வழி பாடு மேற்கொண்டார். (ம-3)

## 23 பேர்...

யிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13,472 ஆக அதி கரித்துள்ளது. (ம-3)

## தடை செய்யப்...

கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த அறிவிப்பை வெளியிட் டுள்ளார்.

உள்நாட்டுப் பிரச்சினைகள் உள்ளக பொறிமுறையின் ஊடாக தீர்க்கப்பட வேண்டும் என்றும், இது தொடர்பாக புலம் பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்தப் போவதாகவும் ஐ.நா.பொதுச் செய லாளரிடம் அரச தலைவர் கோட்டாபய ராஜ பக்ஷ அண்மையில் உறுதியளித்திருந்தார்.

எனினும் இலங்கையில் தடை செய் யப்பட்ட நாடு கடந்த தமிழ் அமைப்புக்களு டன் பேச்சுவார்த்தையை நடத்தப் போவ தில்லை என்று வெளிவிவகார அமைச் சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார். (ம-3)

## இரு போராட்டங்...

கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது,

"இழுவைப் படகு தடைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துமாறு கடற் றொழில் நீரியல்துறை அமைச்சரைக் கோரி இன்று ஞாயிற்றுக்கிழமை முல் லைத்தீவிலிருந்து பருத்தித்துறை வரை கடல் வழியாக நடைபெறவுள்ள எதிர்ப்புப் பேரணிக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு நல்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் ஏற்படுத்தப்பட் டுள்ள உரம் மற்றும் கிருமிநாசினி பற் றாக்குறை விவசாயிகளையும் தோட்டத் தொழிலையும் மிக மோசமாகப் பாதித் திருக்கின்றது. வடக்கிலும் கிழக்கிலும் பெரும்போக நெற்பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

ஓரிரு வாரங்களுக்குள் பசளை மற் றும் கிருமிநாசினி அத்தியாவசியமாக தேவைப்படும். இந்தத் தேவையை உடன டியாகப் பூர்த்தி செய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கிலுள்ள சகல கமநல சேவைகள் மையங்களுக்கூடாக நாளை திங்கட் கிழமை காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டங் கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

கொரோனாத் தொற்று காரணமாக சிறிய எண்ணிக்கையானவர்கள், சமூக இடைவெளிகளைப் பேணி இப்போராட்டத் தில் ஈடுபடுவார்கள். பல இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு அனைவரும் ஆத ரவு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். (ம-3)

## மீண்டுமொரு...

விலை பெருமளவில் உயர்ந்திருந்தன. அத்துடன் மீண்டுமொருமுறை சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்படுமெனவும் நிறுவனங்கள் வெளிப்படையாக அறிவித் தன.

இந்தநிலையில் அண்மையில் அதி கரிக்கப்பட்ட எரிபொருள் விலை மீண்டும் அதிகரிக்கப்படவேண்டுமென எரிசக்தி அமைச்சர் விடாப்பிடியாக நிற்கிறார்.

இவ்வாறு பொருட்களின் விலை அதி கரித்த நிலையில் பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் மீண்டும் உயர்ந்துள்ளது.

அதன்படி தேநீர் விலை 30 ரூபாயாக வும் பால் தேநீர் விலை 70 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பணிஸ் விலை 50 ரூபாய் என்றும், முட்டை ரோல்ஸ் 65 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது.

அதேவேளை மரக்கறி சாப்பாடு ஒன் றின் விலை 160 ரூபாயாகவும் மீன் சாப் பாடு விலை 180 ரூபாயாகவும் கோழி இறைச்சி சாப்பாடு விலை 240 ரூபாயாக வும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் பிறைட் ரைஸ் விலை யும் 200 ரூபாயுக்கு மேல் அதிகரிக்கப்பட் டுள்ளதாக அறியமுடிகிறது. (ம-3)

## இன்றும் நாளை...

வடக்கு, கிழக்கில் விவசாயிகள் மற் றும் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச் சினைகளை முன்னிறுத்தி இன்றும் நாளையும் போராட்டம் இடம்பெறும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை வர் மாவை சேனாதிராசா உறுதிபடத் தெரி வித்துள்ளார்.

தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் மூத்த தலைவர்கள் 'சூம்' வழியாக ஒன்று கூடி ஆராய்ந்த சமயம் இத்தகைய தீர் மானம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நடத்தப்பட இருக்கும் போராட்டங்களை கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அங்கீகரிக்கவில்லை என்று இணையத் தளம் ஒன்றில் வெளிவந்த செய்தியை மறுத்த அவர்,

போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும், விவசாயிகள் மற்றும் மீனவர் களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை வலியுறுத்தும் விதத்தில் போராட்டம் முன் னெடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, காணி அபகரிப்பு மற் றும் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் இத் தகைய போராட்டம் ஒன்று நடத்தப்பட வேண்டும் எனவும் மாவை சேனாதிராசா வலியுறுத்தினார். (ம-3)

## புதிய அரசிய...

யப்படும் என நீதிய மைச்சர் அலி சப்ரி இந்த வார அமைச் சரவைக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

இந்த புதிய அரசியலமைப்புச் சட்ட வரைவை, அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான சட்ட வல்லுநரான ஜனாதிபதி சட்டத் தரணி ரொமேஷ் டி சில்வா தலைமை யிலான குழுவினர் தயாரித்துள்ளனர்.

அரசியலமைப் புச் சட்டத்தை உரு வாக்குவதற்காக பிரதான அரசியல் கட்சிகளின் கருத் துக்கள் மற்றும் யோசனைகளை குழுவினர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அரசியலமைப்புச் சட்ட வரைபை அமைச்சரவைக்கு தாக்கல் செய்து, நீண்ட கலந்துரை யாடலுக்கு உட் படுத்துவது அரசாங் கத்தின் திட்டம் எனக் கூறப்படுகிறது.(ம-3)

## பாரா...

அத்தே ஞானசார தேரரை நியமிக்க நடவடிக்கையெடுக் கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி யுள்ளது.

அத் துரலிய ரதன தேரரை கட்சியில் இருந்து நீக்கியுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவிற்கு நேற்று முன்தினம் கட்சி னால் உத்தியோக பூர்வமாக அறிவிக் கப்பட்டுள்ளது குறிப் பிடத்தக்கது. (ம-3)

## ராஜபக்ஷ...

பொருட்களின் விலை உயர்வுக்கு எதி ராக தலவாக்கலை நகரில் நேற்று நடை பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "தோட்டத் தொழிலாளர்கள், ஆசிரி யர்கள், மீனவர்கள், விவசாயிகள் என அனைவரையும் ராஜபக்ஷ அரசாங்கம் நடுவீதிக்கு கொண்டுவந்துவிட்டது.

இந்த அரசாங்கத்தால் முடியாது. முடி யாதவர்கள் வீட்டுக்கு செல்வதே நல்லது" என அவர் கூறியுள்ளார். (ம-3)

## பொருளாதார...

கணிப்பிட்டு சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டிய நிலையில் இலங்கை உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் தொடர்ந்தும் விளக்கமளிக்கையில்,

உலக பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை கருத்தில் கொண்டு தேசிய பொருளாதார சவால்களை முகாமைத்து வம் செய்ய இயலாமையின் வெளிப்பாடு களையே இன்று நாட்டில் காண்கின்றோம்.

பொருளாதார முகாமைத்துவத்தில் அரசாங்கம் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் இந்த இயலாமையை புரிந்து கொண்டுள்ளனர் என்றார். (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1148
வெற்றி இலக்கங்கள்
மீனம் 0 5 2 2 7 7
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 4557
X 6 7 1 6 2 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0905
U 12 09 48 66 74

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2852
Z 12 23 50 80
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2021.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 587
U 11 22 27 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

சீட்டிழுப்பு வாரம் 093
சீட்டிழுப்பு திகதி 16.10.2021
வெற்றி இலக்கங்கள் 33 41 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,104,160/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1360
சீட்டிழுப்பு திகதி: 16.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,256,614
வெற்றி இலக்கங்கள் 27 34 60 75 O

சனிதா
சீட்டிழுப்பு திகதி: 16.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,741,078.10
வெற்றி இலக்கங்கள் 05 16 47 75 X

சுப்பர் ஜக்பொட் 2,302,328.40/=
திகதி: 16.10.2021
வெற்றி வாரம்: 3246
வெற்றி இலக்கங்கள் 07 44 45 48
ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,153,880/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1534
சீட்டிழுப்பு திகதி 16.10.2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 07 22 42 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,110,585.20/=

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 451
திகதி 16.10.2021
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 16 23 61
விதி எண் 6
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,000,000

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1978. 10.23, அச்சுவினி 4 ஆம் பாதம், 7 இல் செவ்வாய் உள்ள படித்த சொந்தத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். (8274)

**077 906 2476**

## வேலை வாய்ப்பு

தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை.
( உரும்பிராய் ) (8278)

**077 572 9724**
**075 572 9715**

## விற்பனைக்கு

கையால் உழும் உழவு இயந்திரம் மற்றும் 3 விதமான கலப்பைகள், நீர் இறைக்கும் பம்பி என்பன விற்பனைக்கு உள்ளது. (8283)

**077 773 0567**

## வேலையாட்கள் தேவை

- மிக்சர் -
தொழிலகத்திற்கு (ஆண்,பெண்) வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (8280)

**077 546 0028**

## ENGLISH ஆங்கிலம்

பிரத்தியேக வகுப்புகள் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
அனுபவம் மிக்க ஆசிரியர். (8279)

**077 658 9443**
யாழ்ப்பாணம்

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## கணிதம் தரம் 6 - 11 ஆங்கில மொழி மூலம்

அனுபவம் வாய்ந்த கல்லூரி ஆசிரியரின் குழு வகுப்புகள்
(திருநெல்வேலி சிவன் கோவில் அருகாமை)

**077 864 5971** (8273)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2833)

**0768226240** DHL

## அமெரிக்க லொத்தர் விசா

**2023ல் நீங்களும் அமெரிக்காவில்...**
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

விரையுங்கள் பதிவுகள் ஆரம்பாகிவிட்டன **0768226244**

55,000 இலவச விசாக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் நூற்றுக்கணக்கானோர் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றனர்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

(C-2833)

எம்மூடாக விசா வென்றவர்களின் விபரங்களை எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| **மானிப்பாய்** | **சுன்னாகம்** | **புதுக்குடியிருப்பு** | **பருத்தித்துறை** | **வல்வெட்டித்துறை** |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

**V2 Travels** இல் பதியுங்கள்! விசாவை வெல்லுங்கள்!

## வேலை தேடுபவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேலையை இழந்தோருக்கும் மற்றும் புதிதாக வேலை தேடிக் கொண்டிருப்போருக்கும் எமது W.E.C நிறுவனமானது அரியதோர் வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | – 5 கிளை | முல்லைத்தீவு | – 3 கிளை |
| மன்னார் | – 2 கிளை | வவுனியா | – 4 கிளை |

கிளிநொச்சி – 2 கிளை

மேல் காணும் 16 கிளைகளிற்கும் 50 இற்கும் மேற்பட்ட பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**காணப்படும் பதவி வெற்றிடங்கள்**
- மேற்பார்வையாளர்
- அலுவலகர்
- Cleark
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்

**தகைமை**
தரம் 10, O/L, A/L, மேற்பட்ட தகைமையுடையவர்களும் தொடர்பு கொள்ளலாம். (8281)

**076 653 4024 | 077 298 6763**

## IELTS

DMI COMPUTER EDUCATION **0777 17 35 17**

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**

புதிய பிரிவு ஆரம்பம் 18/10/2021 Mon to Fri 8 am ZOOM Online

**German** - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
**French - France** நாட்டுக்கு செல்வோருக்கு (C-2825)

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி **0777 24 07 07** 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## விற்பனைக்கு

தோட்டத்திற்கு போடும் குப்பை
( மரச்சருகு - 3 ரக்ரர் லோட் )
விற்பனைக்கு உண்டு. (8271)

**077 129 1636**

## ஆசிரியர் தேவை

Physics, Chemistry யாழ்.நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் இரண்டு மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பாடங்கள் கற்பிப்பதற்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் தேவை. (8277)

**077 311 0015**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1963 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (8275)

**+016474720358**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985 ஆம் ஆண்டு, தனுசு இராசி, நட்சத்திரம் மூலம், பிரான்ஸ் நாட்டு P.R உடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த பொருத்தமான மணமகள் தேவை. (8282)

**076 376 3232**

## வீடு வாடகைக்கு

நல்லூர் மருதடி வீதியிலுள்ள 3 பெரிய அறைகளுள்ள வீடு வாகனத் தரிப்பிடத்துடன் 15,000/= இற்கு வாடகைக்கு உண்டு. முற்பணம் 350,000/= அரசாங்க, வங்கி உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது. (8267)

**076 258 7073**
**071 244 6926**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 17.09.2021 அன்று இறைபதம் அடைந்த கைதடி மத்தி குமரநகரைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி சிவமணி சின்னத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (15.10.2021) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்துகொண்டு தொலைபேசி ஊடாகவும் நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் " (குறள் எண் 50 )

(8284)

கைதடி மத்தி, குமரநகர்,
கைதடி.

தகவல் :- குடும்பத்தினர்
(சு. சின்னத்துரை - கணவர் )
(இரத்தினசிங்கம்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 17.09.2021 அன்று இறைபதம் அடைந்த திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல. 65, பாற்பண்ணைவீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவி

### அமரர் இராணியம்மா காசிலிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.03.1941 | 17.09.2021 |

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இன்றைய தினம் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (8270)

இல. 65, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 314 5058
குடும்பத்தினர்
(சீலன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.